681

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

681
3—54

REGISTRAR OF BOOKS
13 AUG 1954

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

மன்னர்கள் எதிர்த்தாலும், மத குருக்கள் எதிர்த்தாலும், உலகத்து வாள் முனைகள் அத்தனையும் கூடி எதிர்த்தாலும் நான் அஞ்ச மாட்டேன்! காரணம், அதைவிடக் கூர்மையான பேனாமுனை, இதோ! என் கையிலிருக்கிறது!

—வால்டேர்

198325

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா வெளி நாடு மூன்றணா.

மலர் 1 | சென்னை | 22—6—1954 | செவ்வாய் | இதழ் 1

உலகெங்கும் இலக்கியத் திருடர்கள்!

சென்ற நூற்றாண்டின் முதற் [illegible] பகுதியிலே வாழ்ந்த நாடகாசிரியர்களில் என்ரிக் இப்சன் என்பவன் மிகப்பெரும் புகழ் அடைந்தவன். அவன் எழுதிய நாடகங்கள் என்றால் மக்கள் விழுந்து விழுந்து படிப்பார்களாம். திரும்பத் திரும்பப் [illegible]பார்களாம். மக்களின் மனதை அவன் அ[illegible]வளவு தூரம் கவர்ந்திருந்தான். ஒன்றல்ல; இரண்டல்ல—சுமார் இருபது நாடகங்கள்வரை அவன் எழுதினான். இளமையில் அவன் எழுதியதாகக் கூறப்படும் லேடி இங்கர் (Lady inger of ostraat) என்ற நாடகத்தைத் தவிர மற்ற எல்லா நாடகங்களுமே பெரும் புகழ் பெற்றிருக்கின்றன. நார்வே தேசத்தைச் சேர்ந்த ஸ்கீன் நகரத்திலே 1828ம் ஆண்டு பிறந்த இவன், ஐரோப்பா முழுமையும் வெகு விரைவில் புகழ்பெற்றான்.

இப்சன் தன்னுடைய முப்பதாவது வயதில், அதாவது 1858ல் எழுதி வெளியிட்ட காதலின் கேலிக்கூத்து (Love's comedy) என்ற நாடகம் காதலில் விழுந்தவர்கள் எவ்வளவு அசடுகளாகிறார்கள் என்பதைச் சித்தரித்தது. அது போன்று, வாலிபர் சங்கம் (League of Youth) என்ற நாடகத்தில் போலித் தலைவர்களை ஒரு பிடி பிடித்திருந்தான், இப்சன்.

வாலிப உள்ளங்களை வசிகரிக்கும் சக்தி இப்சனிடம் இருப்பதாக நார்வே மக்கள் பெருமைப்பட்டனர். இப்சன் எழுதிய நாடகங்களில் முக்கியமானவை ப்ராண்ட் (Brand), பீர்கிண்ட் (Beer Gynt), சமூகத்தின் தூண்கள் (pillars of society), பொம்மையின் வீடு (A Doll's House), பிசாசுகள் (Ghost), மக்களின் விரோதி (An enemy of the Peaples), வாத்து (The wild Duck), ரோஸ்மர் விடுதி (Rosmer Sholm), ஹெட்டா காப்ளர் (Hedda Gabller), பையன் இயால்ப் (Little Eyolf), இறந்த நாம் பிழைக்கும்போது (When we dead awaken) முதலியவை.

இந்த நாடகங்களில் இப்சன், மனிதர்களின் குண தோஷங்களை நவினமாகக் கையாண்டிருந்தான் ஒவ்வொரு நாடகத்திலும் ஒவ்வொரு பாத்திரம் மக்கள் மனதில், நடந்த கதைகளாக நாடகங்களை உருவகப்படுத்திற்று. இவ்வளவு பேரும் புகழும் பெற்றிருந்த இப்சன், சாதாரண ஜனங்களின் மனதில் தலைசிறந்த கலைஞனாகக் காணப்பட்டான்.

ஆனல், உலகத்து மக்கள் அற[illegible] முடியாத ஒரு பயங்கரமான ரகசியத்தை—இப்சனைப் பற்றிய ரகசியத்தை—நார்வேயைச் சேர்ந்த ஒரு விமரிசகன் போலன் என்கிற புனைப்பெயரிலே வெளியிட்டான். இப்சன் நாடகங்களில் ஏழு நாடகங்கள் அவனுடைய சொந்தக் கற்பனையல்லவாம். முழுக்க முழுக்க—எழுத்துக்கு எழுத்து வேறு சிலர் எழுதியதாம். அந்த சிலரில் ஒருவர் குடியும் குடித்தனமுமாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பெண்மணி என்கிறான் போலன்.

திருடித்தான் புகழ்பெற்றான் ஷேக்ஸ்பியர்!

இப்சன் வாழ்ந்த வீட்டுக்கு அருகே ஒரு பெண் தன் கணவனுடன் வாழ்ந்து வந்தாளாம். அவளது கணவன் அவளை ஒரு பொம்மை போல நடத்தி வந்தானும், தாசியிடம் இன்பங்காண வருகிறவன் போலத்தான் அவன் வீட்டுக்கு வருவானும்.

இதை சகிக்க முடியாத மனைவி கண்ணீரிலேயே காலங்கடத்திக் கொண்டிருந்தாளாம். அந்த வேதனையை அவள் டைரியாக எழுதி வைத்து, முடிவிலே தான் என்ன செய்யவேண்டும் என்று நினைத்தாளோ. அதையே சமுதாயத்தில் அடிமைபட்டுள்ள பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய நல்ல தீர்ப்பாக எழுதி வைத்தாளாம். அதாவது "ஒரு பெண், கணவனால் கொடுமைபடுத்தப் பட்டால், தன் கணவன் வீடு என்கிற ஜெயிலைவிட்டு வெளியேறியே ஆகவேண்டும்" என்ற தீர்ப்பு. இதை அவள் இப்சனிடம் படிக்கக் கொடுத்தாளாம். அதைத்தான் இப்சன் பொம்மையின் வீடு என்கிற நாடகமாகக் காட்சி பிரித்து எழுதினான் என்கிறான் போலன். அவன் சொல்வதை ஆமோதிப்பது போலவே பொம்மையின் வீட்டில் வருகிற நேரா என்கிற கதாநாயகியும் காணப்படுகிறாள்.

இதுபோன்றே அவன் எங்கெங்கே இருந்து திருடினான் என்பதை ஆதாரங் காட்டி வி[illegible]க்கினான், போலன். ஆனல் [illegible]குள் இப்சனுக்கு ஏராளமான ரசிகர்கள் தோன்றிவிட்டார்கள். அவர்களுக்கு போலனின் விமரிசனம் பிடிக்காமல் அவனை அடித்து ஊரைவிட்டே துரத்திவிட்டார்கள்.

ஆயினும் போலன் தன் விமர்சனத்தை நிறுத்தவில்லை. முடிவாக அவன், "நான் சொல்வது சரியா தவறா என்று தெரிய வேண்டுமானல், இப்சன் திருடியதாக நான் சொல்லும் அவனுடைய ஏழு நாடகங்களையும் படித்துப் பார்த்து, அவனுடைய சொந்த நாடகத்தையும் படித்துப் பாருங்கள். உங்களுக்குப் புரியும்!" என்று கூறுகிறான்.

ஆயினும் மக்கள் இப்சன் மீது சந்தேகப் படத்தயாராயில்லை. போலன் பொறாமைக்காரன் என்று திட்டினார்கள். ஒரு த[illegible]லாபீஸ் சேவகன், போலனு[illegible] வருகிற கடிதங்கள் அத்த[illegible]யையும் அவனிடம் கொடுக்காமல் கிழித்தெறிந்து விட்டானும், இப்சன் மீதுள்ள அன்பால்.

ஆனல் ஒரு [illegible] சனின் வாழ்[illegible]கை வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. அது இப்சன் திருடியிருக்ககூடும் என்கிற சந்தேகத்தையும் வலுப்படுத்துகிறது' போலனின் விமரிசனத்தால் கலங்கித்தான் இப்சன் நாட்டைவிட்டு—நார்வேயை விட்டு — வெளியேறினான் என்கிறார்கள் சில அறிஞர்கள். திரும்பி அவன் நார்வேக்கு வந்த போது போலன் இறந்து விட்டான். போலன் என்றொரு விமரிசகன்இருந்ததையே மக்கள் மறைத்து, அவன் எழுதிய வற்றைக் கொளுத்தி விட்டார்கள். நார்வேயில் வந்து இறங்கிய இப்

[2-ம் பக்கம் பார்க்க]

அச்சில்

அம்பிகாபதி நாடகம்

கம்பனின் செல்வன் அம்பிகாப்தியும், சோழன் செல்வி அமராவதியும் கொண்ட காதல் பற்றி மறைமலை அடிகளாரும் மற்றும் சில புலவர்களும் வரைந்துள்ளார்கள். திரைப் படமும் பலநாள் முன்னர் வந்துள்ளது. ஆனல் அம்பிகாபதி பற்றிய ஆராய்ச்சி சுவையான கதையைத் தேடித் தந்திருக்கிறது. அதை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட காதல் ஓவியம்—வசன ஓவியம்தான்—

கண்ணதாசன்
எழுதிய

ராஜ தண்டனை

இலக்கியக் கழகம்
2, சண்முக முதலி தெரு, சென்னை—14.

[illegible] ன். [illegible] நம். [illegible] ள்
பெ[illegible] போர் வாள், கலை மனறம் இருந்து தமிழ கற்றுக் முதலே [illegible] தில்லை என் நஷ்டம் தாயகாயல மூடப்
கொடுத்தது. இன்றைக்குத் பது இதன் தனிச் சிறப்பு.

[4-ம் பக்கம் பார்க்க]

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சனுக்கு மாலை மரியாதைகள் லட்சக் கணக்கில் காத்திருந்தன. ஆனால் அவன் மட்டும் நிம்மதி யில்லாமல் இருந்தான். மீண்டும் நார்வேக்கு வந்த பிறகு அவன் ஒன்றுமே எழுதவில்லை, புத்தி மாருட்டம் போலவே இருந்ததாம். கடைசியில் இப்சன் 1906-ம் வருடம் இயற்கை எய்தினான்.

* * *

தாமஸ்மான் என்பவன் உலகப் பிரசித்திப் பெற்ற ஜெர்மன் நாவலாசிரியன், "பட்டென் புரூக்ஸ்" என்ற நாவலுக்காக 1929-ம்வருஷம் இலக்கிய நோபெல் பரிசு பெற்றவன். இவன் எழுதிய "பட்டென் புரூக்ஸ்" நோபெல் பரிசு பெற்றதே தவிர இவன் போன்ற ஆசிரியர்களில் பலர் அதை மதிக்க வில்லை. காரணம் இந்த நாடகத்தில் பெரும் பகுதி இவனது சொந்தக் கற்பனை அல்லவாம். எழுதியவன் ஜெர்மன் ஹோட்டல் ஒன்றில் மானேஜராக வேலை பார்த்த, ஏகல்ஸ் என்பவனாம். அவனுக்குப் பணம் கொடுத்து இவன் அதைப் பெற்றுக்கொண்டு, மெருகு கொடுத்து தன் பெயரில் வெளியிட்டானாம். அதைப் பற்றி ஒரு அமெரிக்க விமரிசகன் இப்படி வர்ணிக்கிறான்.

"முன் மேடையில் தாமஸ் மான் நின்று பரிசு வாங்குகிறான். பின் திரையில் ஏகல்ஸ் நிற்கிறான். மேடையைப் பார்க்கும் [illegible] மக்கள் திரையைப் பார்க்க வில்லையே!"

இதுவும் பொறாமையில் எழுந்தது என்றே பலர் சாதித்தனர். இது உண்மையோ, பொய்யோ, மானின் புகழ் பலமாக இருந்ததால் பொய்யாகவே போய் விட்டது இந்த விமரிசனம்.

* * *

'ஆங்கில நாடகம்' என்றால் நம் முன்னால் நிற்பவன் ஷேக்ஸ்பியர். ஆனால் அவனுக்கும் மேலே ஒரு பெரும் புலவன் நிற்கிறான். அவன்தான் மார்லோ! ஆங்கில நாடக இலக்கியத்தின் கர்த்தா ஷேக்ஸ்பியர் அல்ல, மார்லோதான். ஆங்கிலேயர்கள் அதை இன்றைக்கும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் ஷேக்ஸ்பியரின் விசிறிகள் அதை மறுப்பார்கள். காரணம், அன்பு அவ்வளவு! மார்லோ காண்டர்பரியில் 1564-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி பிறந்தான். ஷேக்ஸ்பியர் 1564-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் தேதி பிறந்தான். இரண்டே மாதங்கள் வித்தியாசம்.

மார்லோ பரம தரித்திரன்; பராரி. தந்தை சக்கிலித் தொழில் செய்தவன். ஆயினும் மார்லோ கேம்பிரிட்ஜில் படித்துப் பட்டம் பெற்றான். *1587*-ம் ஆண்டு எம். ஏ. பட்டம் பெற்றான். மாணவனாயிருக்கும் போதே நாடகங்கள் எழுதினான். அவனது முதல் நாடகம் மஹா தாமூர்லேன் என்பது. மோனையில்லாக் கவிதை நடையில் அமைந்திருந்தது. இதுதான் ஷேக்ஸ்பியரின் கவிதைகளுக்கு வழிகாட்டி. மார்லோவின் இரண்டவது நாடகம் பாஸ்டஸின் சோக சரித்திரம் என்பது.

இந்த சிறு நாடகத்தைத்தான் ஜெர்மன் கவிஞன் கெதே பெரிய நாடகமாக 'பாஸ்ட்' என்கிற தலைப்பில் எழுதினான். ஆனால் கெதே யோக்கியன். தன் நாடகத்துக்கு மூலம் மார்லோ என்பதை ஒப்புக் கொண்டு, பகிரங்கமாகப் பாராட்டினான். மார்லோவை அவன் மகாகவி என்று புகழ்ந்தான்.

மார்லோ எழுதிய 'மால்டா யூதன்' என்னும் நாடகத்தைத் தான். ஷேக்ஸ்பியர் 'தர்ஜமா' செய்து ஷைலக் நாடகமாக ஆக்கினான். ஆனாலும் இரண்டையும் படித்தவர்கள் மார்லோ சிருஷ்டித்த கருமியையே ரசித்தார்கள்.

1590-ம் ஆண்டில், மார்லோ 'இரண்டாம் எட்வர்டு' என்ற நாடகத்தை எழுதினான். இதைத் தான் ஷேக்ஸ்பியர் 'இரண்டாம் ரிச்சர்டு' என்ற நாடகத்திற்கு மூலமாகக் கொண்டான். பல வசனங்களை ஷேக்ஸ்பியர் அப்படியே மார்லோவிடமிருந்து திருடியிருக்கிறான். ஷேக்ஸ்பியர் எழுதிய காதற் கவிதைகளெல்லாம் மார்லோவின் 'வீரனும் லியாண்டரும்' என்ற கவிதையிலிருந்து உருவானவைதான்.

மார்லோ, பென் ஜான்சன், ஷேக்ஸ்பியர் மூவரும் சம காலத்தவர். எலிஸபெத் காலத்தில் வாழ்ந்தவர்கள். மார்லோ சிந்தனைச் சிற்பி; உடலையும் ஒழுக்கத்தையும் பேணாமல் கெட்டவன்; வறுமையில் வாடியவன்; மார்லோவுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது; முழு நாத்திகன்; புரட்சிக்காரன்; மதபோதகர்களை கண்மண் தெரியாமல் தாக்கியவன்; காதற்பித்தன்; கலை வெறியன்; நிறையக் குடிப்பான்; நண்பருடன் கூடிக் குலாவுவான்.

ஒரு நாள் அவன் சாராயக் கடையில் நிரம்பக் குடித்துவிட்டு ஒரு துஷ்டனுடன் சண்டை போட்டான். சண்டை முற்றிற்று; குடிகாரன் மார்லோவை வெட்டிக் கொன்று விட்டான். அற்ப ஆயுளாக, இருபத்தொன்பது வயதில் மார்லோ இறந்தான். பிறகு ஷேக்ஸ்பியர் பெரும் புகழ் பெற்றான்; உலக மகாகவி ஆனான்.

ஒரு முறை ஜான்சன் சொன்னான்: "சுய சிந்தனைக்காரர்கள் இருந்த இடம் தெரியவில்லை. திருடியவர்கள்– திருடுகிறவர்கள் முன்னணியில் நிற்கிறார்கள்." *

'பார்வதிநாதன்'

இனி வரும் பல புதிய பகுதிகள்!

- அண்ணாவின் பெரும்பயணம்
- சிறைகண்டேன் தோழி நான்!
- மாஸ்கோவா? காஞ்சீபுரமா?
- இ. பி. கோ. 109
- செத்தவர்களெல்லாம் சிறந்த கவிகளே!

இன்னும் பலப்பல!

பொது உடைமைத் தமாஷ்!

["இரவிலிருந்து" என்ற ஒரு புதிய புத்தகம் அமெரிக்காவில் பிரமாதப்படுகிறது. 'ஜான் வால்டின்' என்ற புனைபெயருடன், மாஜி பொது உடைமைப் புரட்சிக்காரர் ஒருவர் அதை எழுதியிருக்கிறார். 1932-ம் ஆண்டு மே மாதம் ஹாம்பர்க்கிலே நடந்த சர்வ தேசக் கடல் தொழிலாளர் காங்கிரஸை அவர் வர்ணித்திருக்கிறார். மகாநாட்டுக்கு இந்தியத் தொழிலாளரின் பிரதிநிதிகள் வர, பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதிக்கவில்லையாம், துறை முகத்தில் வந்துநின்ற கப்பலில் இருந்த இந்துக்களில் யாரோ இருவரை, மகாநாட்டார் இழுத்துக் கொண்டுபோய் பிரதிநிதிகள் ஆக்கிவிட்டார்களாம். அந்த வைபவத்தை வால்டின் வெகு ரஸமாய் வர்ணிக்கிறார்.]

நான் தொழிலாளர் காங்கிரஸைப் பற்றிப் பேசினேன். இந்துக்களுக்கு அது புரியவில்லை. வேறு வழியைக் கடைப்பிடித்தேன். "பாட்டுப் பாடும் குட்டிகளைப் பார்க்க, உங்களுக்கு ஆசையா? சின்னச் சின்னக் குட்டிகள்! என்னோடு வாருங்கள். கட்டணம் கிடையாது".

அவர்களில் மூன்று இந்தியர் என்னோடு வர இசைந்தனர். டாக்ஸியில், நேரே காங்கிரசுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

மகாநாட்டின் தலைவர் எர்னஸ்ட் வால்வெபெர் எழுந்து "இப்போது கல்கத்தா துறைமுகத் தொழிலாளரின் பிரதிநிதிகள் பேசுவார்கள்" என்றார்.

மூன்று இந்துக்களும் திறுதிறு என்று விழித்துப் பல்லைக்காட்டிக்கொண்டு நின்றார்கள்.

வாலிப அமெரிக்கன், மைக் ஆப்பிள்மான், இந்த நெருக்கடியை சமாளிக்க முன்வந்தான். அவன் அந்த இந்துக்களை குரூரமாய் நோக்கி "எவ்வளவு நேரம் நீங்கள் வேலை செய் [illegible] கிறீர்கள்?" என்று கேட்டான்.

ஒரு இந்து:. "ஆறுக்காறு"

மைக்:- நமது கிழக்கிந்தியத் தோழர் சொல்லுகிறார் — ஏகாதிபத்யச் சுரண்டிகள், நமது கிழக்கிந்தியத் தொழிலாளரை. காலை ஆறுமணியிலிருந்து மாலை ஆறு மணி வரையில் நாள் ஒன்றுக்குப் பன்னிரண்டு மணி நேரம் இப்படியாக வாரம் ஏழுநாள், ஓயாமல் வேலை வாங்குகிறார்களாம்".

"உங்கள் சம்பளம் என்ன?

இந்து: மூன்று பவுன்,

மைக்: கிழக்கிந்திய தொழிலாள சகோதரர்கள் அறுபது ஷில்லிங்குக்கு மாதம் ஒன்றுக்கு முன்னூற்று அறுபது மணி நேரம்—அதாவது கால் டாலருக்கு ஆறு மணி விகிதம் அடிமை போல் உழைக்கிறார்கள்.

"உங்கள் சாப்பாடு என்ன?"

இந்து; அரிசி.

மைக்: அவர்கள் மிருகங்களைப் போல தினம் ஒன்றுக்கு ஒரு பிடி அரிசி உணவளிக்கப்படுகிறார்கள்.

"உங்களுக்கு அதிகப் பணம் வேண்டுமா? நல்ல சாப்பாடு வேண்டுமா? தொழிலாளிகளை உதைக்க இஷ்டமா" என்று அவர்களைக் கேட்டான் மைக்.

இந்துக்கள் பேந்தப் பேந்த விழித்து தலையை ஆட்டினார்கள்.

மைக்: வர்க்கப் போரிலே அதிகக் கூலியும், குறைந்த வேலை நேரமும், சுரண்டலினின்றும் விடுதலையும் பெரும் அபேதவாதத்துக்காகவும் ஏகாதிபத்ய சுறாமீன்கள் சோவியத் யூனியனைத் தா[illegible]குவதினின்றும் அதைக் காப்பாற்றுவதற்காகவும், போராடும் போராட்டத்திலே-கலந்து கொள்ள தாங்கள் தயார் என்று கிழக்கிந்தியத் தொழிலாளர்கள் அறிவிக்கிறார்கள்.

சபையோரின் கரகோஷம் வானைப் பிளந்தது. உடனே மூன்று இந்துக்களையும் மண்டபத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு போனோம்.

"எங்கே அந்தப் பாட்டுக்காரக் குட்டிகள்?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"ச்சூ! உங்கள் கப்பலுக்கு ஓடிப்போங்கள்!" என்று சொல்லி அவர்களை விரட்டிவிட்டோம்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

ஜூன் மாதம் 26, 27-ந் தேதிகளில் வேலூரில் 'அழகிரி பந்தல்' முத்து அரங்கில் நடைபெறும்

26—6—54 சனி:	27—6—54 ஞாயிறு
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: ஈழத்து அடிகள்	தலைவர்: கே. ஏ. மதியழகன்
திறப்பாளர்: இரா. நெடுஞ்செழியன்	திறப்பாளர்: நாஞ்சில் கி. மனோகரன்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, மற்றும் திராவிட முன்னேற்றக் கழக வீரர்களும், சட்டசபை எம். எல். ஏ.-க்களும், பல இயக்கத் தோழர்களும் கலந்து கொள்வார்கள்.

இசை முரசு நாகூர் அனீபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களிலும் நடைபெறும்

இரு நாட்களிலும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும் 'அம்மையப்பன்,' 'சந்திரமோகன்' நாடகங்கள் நடைபெறும்,

—வரவேற்புக் குழுவினர்.

எண்ணம்

கண்ணதாசன்

காடு பற்றி எரிந்து கொண்டிருக்கிறது; நான் பூஞ்செடி நடுகிறேன். விஷயம் இது தான்; பத்திரிக்கைத் தொழில் கீழே போய்க் கொண்டிருக்கிறது. நான் புதுப் பத்திரிகை ஆரம்பிக்கிறேன். "பைத்தியக்காரத்தனம். ஏன் இப்போது பத்திரிகை!" என்றார் ஒரு நண்பர். "பத்திரிகைத் தொழில் லாபகரமானதல்ல, இந்தக் காலத்தில்!" என்றார் ஒரு வட்டிக் கடை நிபுணர், செட்டியார் பாணியில்! பலர், பல கருத்துக்கள் கூறினர். ஆதரித்தோர் குறைவு. எதிர்த்தோர் பலர். எல்லாம் நட்பின் காரணம்!

* * *

கடைசியில் தோழர் சம்பத்தைக் கேட்டேன். "ஆரம்பிக்க[illegible]. ஆனால் இடையிலே[illegible] வளவும் [illegible] [illegible] முடிவிலே கவிழவும் கூடாது" என்றார். எண்ணிப் பார்த்தேன். துவளாது; கவிழாது என்ற முடிவு தோன்றிற்று. சம்பத்தின் வார்த்தையை மனதில் வைத்துக் கொண்டு துவங்கி விட்டேன். இதோ முதல் இதழ் காண்கிறீர்கள்.

* * *

'முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பல பத்திரிகைகள் வருகின்றன. எதை வாங்குவது என்று மக்களுக்குப் புரியவில்லை. விற்பனை எண்ணிக்கை இறங்குமுகம்' என்று எழுதியுள்ளார், மதுரை விற்பனையாளர். உண்மை. பத்திரிகைகள் அதிகம்தான்— நாட்டின் பொருளாதார நிலையில். ஆனால் இயக்கத்திற்குஇவை குறைவு! கடலளவு பரந்த கொள்கைகள்; சொல்வதற்குப் பல பிரச்சினைகள். இதை நினைத்துக் கொண்டால் பத்திரிகைகள் இன்னும் தேவை என்பது புரியும்.

* * *

இயக்கத்திலே குறிப்பிடத் தக்க பத்திரிகைகள், நம் நாடு, திராவிட நாடு, மன்றம், திராவிடன். தீச்சுடர், தனியரசு, முரசொலி, பொன்னி, மாலை மணி, போர் வாள், கலை மன்றம் முதலியன.

'நம் நாடு' சொன்னாலும் சொல்லா விட்டாலும் நம் ஏடு தான். இயக்கத்தின் உயிர். பழைய பாகிஸ்தானுக்கு 'டான்' மாதிரி, ரஷ்யாவுக்கு 'பிராவ்டா' மாதிரி, நமக்கு நம் நாடு. அதை வாங்க வேண்டியது, பிரதியொரு மனிதனின் அன்றாடக் கடமை. 'சரக்கு நயமா? அண்ணா எழுதுகிறாரா?' என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. 'நம் நாடு' வாங்குவது கடமை என்பது மட்டும் நினைவிருக்க வேண்டும். குளிப்பது தினசரிக் கடமை. 'தண்ணீர் உப்பாயிருக்கிறது; சோப்புப் போட்டால் துவளுகிறது" என்பதற்காகக் குளிக்காமலிருக்க முடியுமா? — அது போன்றே இதுவும். "இயக்கத்திற்குப் பத்திரிகை இல்லை! எப்போது ஆரம்பிக்கப் [illegible] போகிறீர்கள்! ஆஹா ஊஹூ! இன்னும் ஏன் யோசனை! நான் தருகிறேன் பணம்" என்றெல்லாம் 'முன்னொரு காலத்திலே' எவ்வளவு பேர் பேசினோம். இப்போது அதைச் செயலில் காட்டுவோம். காலையிலே எழுந்தவுடன் ஒரு அணா எடுத்து அதற்கென்று ஒதுக்கிவிடுவோம். ஆயிரம் இரண்டாயிரம் வேண்டாம். ஒரு அணா! பன்னிரண்டு பைசா! போதும். லட்சம் பேரிலே கால் பங்கு தோழர்கள் இப்படிக் கட்டுப்பாடாக ஒரு அணா ஒதுக்கட்டும். பிறகு பாருங்கள். சாண்தான் முழம் என்று நாம் சாதிப்பதால்தான், அங்குலம் தான் முழம் என்று பத்திரிகை சாதிக்கிறது. நாம் முழத்தை முழமாகவே அளந்தால், நம் நாடு, கஜத்தை முழமாக அளக்காதா!

* * *

சிறைக்குள் இருப்பவன், பெண் பிள்ளையைப் பார்த்த மாதிரி, இருட்டில் இருப்பவன் சூரியனைக் கண்டமாதிரி இயக்கத்தில் தோன்றிய பத்திரிகை திராவிட நாடு. 'திராவிட நாடு' எப்போது வரும் என்று காத்துக் கிடந்து வாங்குவோம். காரணம், அது குரு பீடத்தில் இருந்து தமிழே கற்றுக் கொடுத்தது. இன்றைக்குத் தமிழ் எழுத நாம் துணிவாகப் பேனாவை எடுக்க முடிகிறது என்றால், திராவிட நாட்டிலிருந்து அவ்வளவு கற்றுக் கொண்டிருக்கிறோம். என்று பொருள். "அருமையான நடை" என்று இப்போது நாம் வர்ணிக்கிற நடையெல்லாம், அந்த இடத்திலிருந்து வந்தவை என்பதை நன்றியுள்ள மனிதர்கள் சொல்லாமல் முடியாது. எதிரிக்கு உண்மையிலேயே அச்சம்; நமக்கெல்லாம் ஆனந்தம். இப்படி இருவேறு உணர்ச்சிகளைத் தூண்டிவிட்ட ஒரே ஆயுதம் திராவிட நாடு.

வ.ரா. ஒரு முறை சொன்னார். "அண்ணாத்துரை பத்திரிகையை விடாமல் படி. உனக்கு நல்ல நடை எழுத வரும்" என்று. ம. பொ. சி. இப்போது மறந்திருப்பார். அவர் அப்போது சொன்னது இது. "திருக்குறள் படித்தால் புலவனாகலாம்; திராவிட நாடு படித்தால் தமிழனாகலாம்!"

பெருமைக்குரிய இதழ் திராவிட நாடு, இன்னும் அந்தப் பெருமையை அது வளர்த்துத்தான் வருகிறது. வாரம் இரண்டணா; மாதம் எட்டணா. கொடுக்க முடியாத [illegible]

* * *

'மன்றம்' வாங்குவது இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுப்பது போல! படித்த உடனே 'பக்கோடா' மடிக்க வேண்டிய பத்திரிகையல்ல, மன்றம். நாம் படித்துவிட்டு 'பைண்டு' செய்து வைத்தால் யுக யுகாந்தரங்களுக்கு அது பயன்படும். அது ஒரு சர்வகலாசாலை. தமிழ்ப் புலமைபெற சங்கப் படிப்பு வேண்டாம்; மன்றம் படித்தால் போதும். "அவன் அவளைப் பார்த்தான்; உடனே கண்ணே! மணியே! கற்கண்டே! பெட்டகமே! என்றான். காதலில் விழுந்து கால் மணிநேரம் வசனம் பேசினர்" என்று பயனற்ற கதைகளைக் கொட்டுவதில்லை 'மன்றம்.' 'சிலசொல்லல் தேறிய' தோழர் நெடுஞ்செழியன் பொறுக்கி எடுத்து விஷயங்களைக் கொடுத்து வருகிறார். நமக்காகவும் நமது சந்ததிகளுக்காகவும் ஒரு பத்திரிகை வாங்க கசப்பாகவா இருக்கும்?

* * *

'திராவிடன்' நெடுநாளையப் பத்திரிகை. அரிவாள் சுத்தி அடா பிடியாக நடந்தால், அதை அறிவு பெற வைக்கும் வைரக்கத்தி 'திராவிடன்.' இது தவழ்ந்தது முதலே துவண்டதில்லை என்பது இதன் தனிச் சிறப்பு.

மூன்றணாவுக்கு மூன்று ரூபாய்ச் சரக்கு இருக்கிறது இதில்.

* * *

பட்டி தொட்டியெல்லாம் பறந்து சென்று பணி செய்பவர் தோழர் சிற்றரசு. நகைச் சுவை, நளினமான சூடு, இவையெல்லாம் அவரது 'தீச்சுட'ரின் தனிச் சிறப்புக்கள். தோழர் சிற்றரசு 'பழைய சுய மரியாதைக் காரர்களின்பட்டியலிலிருந்து இன்றுவரைஇடையறா இயக்கப் பணி செய்பவர். அத்தகைய நண்பரின் எழுத்துக்களும் இரண்டணாவுக்கே கிடைக்கின்றன.

* * *

'தனி அரசு' ஒரு அலாதியான ஏடு. படிக்கும்போது நமக்கே ஒரு தெம்பு ஏற்படும். ஆசைத்தம்பியின் எழுத்து என்றால் என்ன? அரசாங்கத்தைக் கேளுங்கள்; புரியும்.

* * *

தோழர் கருணாநிதியின் 'முரசொலி' ஒரு கலைச் சுரங்கம்; கற்பனை ஊற்[illegible] நடையில் ஒரு தனிக்கவர்ச்[illegible] வீணையின் தந்தியைத் தடவினாலும், வில்நாணைத் தடவு கிறமாதிரி விஷயங்களைச் சொல்கிறார். 'நரம்புகளை முறுக்கேற்றி, பச்சை ர[illegible] [illegible] நரம்புகளை விம்மிப் புடைக்க வைத்து, கோழையை வீரனாக்கும், 'முரசொலி.' இதன் விலையும் இரண்டணாத்தான்!

* * *

இது போன்றே பொன்னியும் ஒரு இலக்கியச் செல்வம். 'கலை மன்றம்,' மாலை மணி, 'போர் வாள்' ஆகியவையும் சிறந்த பத்திரிகைகளே.

* * *

கஷ்டப்பட்டு, மக்கள் தி. மு. க. கொள்கை தாங்கும் எந்த ஏட்டினை வாங்கினாலும் ஒவ்வொரு வழியில் புதுமை காணலாம். முடியாதவர்கள், கழகத்தின் சார்பில் வரவழைத்து, எல்லாரும் படிக்கலாம். ஏராளமான பிரதிகள் செலவழிவதில்தான் பெருமையும் லாபமும் இருக்கிறது என்று நம்மவர்கள் யாரும் கருதவில்லை. கருத்துக்களைச் சொல்வதுதான் பிரதான நோக்கம். சொல்வதற்கும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன.

* * *

ஒன்றை யாரும் மறந்து விடக் கூடாது. நம்முடைய பத்திரிகைகளில் லாபகரமாக நடப்பவை என்று கணக்குப்பார்த்தால் இரண்டொரு பத்திரிகைகள்தான் தங்கும். பல பத்திரிகைகள் நஷ்டம் தாங்காமல் மூடப்

[4-ம் பக்கம் பார்க்க]

விவாக ரத்து!

பாராளு மன்றத்தில் விவாக ரத்து பற்றிய விவாதம் காரசார மாக நடந்ததல்லவா! இந்த நேரத்தில் மேல் நாட்டின் விவாக ரத்து எவ்வளவு விநோதமாக செயல்பட்டிருக்கிறது, என்பதை நினைவுபடுத்திப் பார்க்கலாம்! ....

மேல் நாட்டிலே நிகழும் பல விவாக விலக்கு வழக்குகள் நிரம்ப வேடிக்கையாயிருக்கும்.

தன் கணவனைப் பிடிக்கவில்லை என்று ஒரு பெண் விவாக ரத்து மனுச்செய்து கொண்டாள். காரணம் அவன் இவளுடைய தலையைத் தண்ணீர்த் தொட்டிக்குள் முழுகும்படி அமுக்கிவிட்டானும். ஆனுல் அவனைக் கேட்டால், "ஆமாம், நான் என்ன செய்வது? அவள் சள சள என்று ஓயாமல் பேசிக் கொண்டேயிருந்தாள். நிறுத்தும் வகை தெரியவில்லை. அதனுலேயே அப்படிச் செய்தேன்" என்று சமாதானம் சொன்னுன்!

* * *

மற்ருேர் வழக்கிலே, கணவ...க்கு முட்டைகோஸ் தின்பதிலே ...ந்த பிரியமாம். ஆனுல் மனை...கு அது பிடிக்காதாம்; காரட் தான் பிடிக்குமாம். இதில் இருந்து இருவருககும் தினசரி போர். மனைவி எபபொழுதும் காரட்டையே வாங்கி வந்துவிடுவாள். ...தற்கு என்ன செய்யலாம் என்று ...

கடைசியாக அவளை ஒரு அறைக்குள் போட்டு அடைத்து, அவளுக்கு காரட்டைத் தவிர வேறென்றையுமே கொடுக்காமல் வாட்டினுன். இதனுல் கோபம் கொண்ட மனைவி அறையை விட்டு வெளி வந்தவுடனே நேராகக் கோர்ட்டுக்குச் சென்று வழக்குத தொடுத்து வெற்றியும் பெற்று விட்டாள்.

* * *

நீதிபதியிடம் ஒரு பெண், தன் கணவனைப்பற்றி, "இவர் இரவு படுக்கையறையில் 18 அல்லது 20 சிகரட் குடித்து அறை முழுவதையும் புகை மயமாக ஆக்கி விடுகிருர். புகை வெளியே செல்லுவதற்காக நான் ஜன்னல் கதவுகளைத் திறக்க முயன்ருல், அதற்கு இடம் தராமல் தடுக்கிருர்," என்று சொல்லி விவாக ரத்து வேண்டினுள்.

* * *

கணவன் கடைத்தெருவிலிருந்து, 'தற்கொலை செய்து கொள்ள 291 வழிகள்' என்ற புத்தகத்தை வாங்கி வந்துவிட்டானும். எங்கேனும் ஒரு வேளை அந்தப் புத்தகத்தில் படித்தவற்றைச் செயலில் காட்டிவிட்டால் என்ன செய்வது என்று பயந்து இன்னெரு பெண் விவாக ரத்துக்கு விண்ணப்பித்துக்கொண்டாள்.

* * *

பின்லாந்துக் கோர்ட்டில் வந்த ஒரு விவாக ரத்து வழக்குத்தான் மிக விநோதம். புருஷனுக்கு வயது சுமார் 87 இருக்கும். மனைவி அவனை விட சுமார் 2-வயது மூத்தவள். நீதிபதி, "உங்களுக்கு எப்போது கலியாணம் நடந்தது" என்று கேட்டார். அதற்குக் கணவன், "1872—ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 7-ம் தேதி" என்று பதில் உரைத்தான்.

"சரி! எப்போது சச்சரவு ஆரம்பித்தது?"

"1872-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 7-ம் தேதி" என்று பதில் சொன்னுள் மனைவி. உடனே வேறு பேச்சில்லாமல் விவாக ரத்துக்கு அனுமதித்து விட்டார் நீதிபதி!

தன்னுடைய சகோதரியைத் தன் கணவன் முத்தமிட்டுவிட்டான் என்று கோபமுண்டு, விவாக ரத்தை விரும்பினுள் மற்ருேர் பெண். ஆனுல், அவனைக் கேட்டால், தன் மனைவிக்கும் அவளது சகோதரிக்கும் வித்தியாசமே தெரியாமலிருப்பதுதான் தனது குற்றத்துக்கும் காரணம் என்கிருன். மனைவி இந்தச் சமாதானத்தை நம்பவில்லை. நீதிபதியும் நம்பவில்லை. *

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டு விட்டன. ஆகவே லாபம் கருதி இயக்கத்தில் யாரும் பத்திரிகை ஆரம்பிக்கவில்லை. சொல்லப் போனுல், இயக்கத்தின் சார்பில் வெளிவரும் பத்திரிகைகளுக்கு பல கஷ்டங்கள் உள்ளன. கஷ்டங்களிலிருந்து மீண்டு, லாபகரமாக நடத்துவதென்ருல், கொள்கையை விட்டுத் தாண்டினுல்தான் முடியும்.

பத்திரிகைக்கு உயிர்நாடி விளம்பரம். ஆரியர்கள், வடவர், தேசியத்தார் நடத்தும் பத்திரிகைகள் பல, பரங்கிப் பழம் மாதிரி பருத்திருப்பதன் காரணம் விளம்பரங்கள்தான். அவர்கள் யாரிடமும் விளம்பரம் வாங்கி தைரியமாகப்போட்டு பணத்தைத் தட்டிவிட முடியும். டாடாவா, பிர்லாவா, டால்மியாவா, எவனுனல் என்ன, போய் விளம்பரம் வாங்கி பணமும் வாங்கி விடுவார்கள். அல்லது, ஊரான் பணத்தை அணுக்கணக்கில் வாங்கி நிறுத்தல் அளவையில் அள்ளிவிடும் குறுக்கெழுத்துப் போட்டிகள் இருக்கவே இருக்கின்றன.

நமக்கு அந்தக் காலம் பூஜ்யம். வடவர் தொழிலுக்கு நாம் ஆக்கம் தர முடியாது; குறுக் கெழுத்துப் போட்டிக் கொள்ளையை நாம் ஆதரிக்க மாட்டோம்; மட்டரக விளம்பரங்களைத் திரும்பியும் பாரோம்! நமக்கு முக்கியம் லட்சியம். அதன் எல்லைக்குள் லாபம் இல்லை. நஷ்டம் தான் அதிகம். ரஷ்ய ஸ்தானிகரிடமிருந்து நமக்கு பணமும், பத்திரிகைக் காகிதமும் வரவில்லை; அமெரிக்கர் 'செக்' வெட்டவுமில்லை. கையை ஊன்றிக் கரணம் போடுகிருேம், கரணம் தப்பினுல் மரணம் என்று தெரிந்தும்.

* * *

இந்த நேரத்திலே—இந்த நிலையிலே 'தென்றல்' உங்களைத் 'தீண்ட' வருகிறது. ஆம்; தென்றல் தான் மனிதனைத் 'தீண்டுகிறது.' இதோ தென்றல் தானுகவந்து உங்களைத் 'தீண்டுகிறது.' அந்தத் 'தீண்டு'தலில் நயமிருந்தால் — நளினமிருந்தால்— வாரம் இரண்டணுக்கொடுங்கள். இல்லையேல் வேண்டாம்! *

நமது குடும்பம்

கண்ணதாசன்

நாமெல்லாம் ஒருகுடும்பம்: ஆமாம்! சொல்லும்,
நாவெல்லாம் வாயெல்லாம் இனிக்கும் வண்ணம்!
தேனெல்லாம் பாலெல்லாம் கனிகளெல்லாம்
தித்திக்கும் அமுதெல்லாம் கொண்ட இல்லம்!

* * *

நாமெல்லாம் ஒருகுடும்பம்! ஆகா அந்த
நயமிகுந்த வார்த்தையிற்றான் என்ன இன்பம்!

* * *

அன்னையரும் குழவிகளும் காளைக் கூட்டம்
அத்தனையும் உண்டிந்த வீட்டில், இங்கே
முன்னையரின் அடிச்சுவடும் அவர்கள் வைத்த
முழுமுதலாம் போர்க்குணமும் குறைவே இல்லை!
நன்னெறியும், கலைமணமும், நவிலவொண்ணா
நலம்பாடும் கவிஞர்களும், அறிவின் கோவும்
பன்னெடுநாள் ஆண்டிருந்தோர் சரித்திரத்தைப்
பகுத்தெடுத்து வைப்பார்கள் பலரும் உண்டு!
என்ன இலை? இழிந்தகுணம் கிழாம்போக்கு
எள்மூக்கு முனையளவும் இல்லை யென்பேன்!
சொன்னமலை யவ்வளவு அறிவும், மாந்தர்
துயரறுக்கும் அரிவாளும் கோடி உண்டு!
நாமெல்லாம் ஒருகுடும்பம்! ஆகா! அந்த
நயமிகுந்த வார்த்தையிற்றான் என்ன இன்பம்!

அறிஞர்—தலைவர்—அண்ணா

[அண்ணா அவர்களைப்பற்றி 'பெரும் பயணம்' என்ற தலைப்பில் ஒரு காவியமே ஜூலை 15-ம் நாள் இதழிலிருந்து தொடங்க இருப்பதால் இங்கு ஒன்றும் எழுதாது விடுக்கிறேன்..............]

குயில்

ஆயிரந்தான் இருந்தாலும் நமது நெஞ்சில்
அழியாது புதுச்சேரிக் குயிலின் கானம்!
பாயிரந்தான் மற்றவர்கள் கவிதை யாவும்
பண்பான காவியங்கள் குயிலின் சொத்து!

* * *

"நிமிர்ந்தநடை, நேர்கொண்ட பார்வை! இந்த
நிலத்தினிலே யாருக்கும் அஞ்சாச் சிம்மம்"
குனித்த இருபுருவத்தின் கீழே நின்று
கூர்கட்டிப் பாய்விழியே கவிதை போலும்!
அதிர்ந்ததிந்தப்பூமி அவர் நடையில் என்றால்
அழகுதமிழ் நடையினையும் சேர்த்தே சொன்னேன்!
அரைக்கவிதை குறைக்கவிதை அறியாக் கோமான்!
அவர் கவிதை கள்ளல்ல; காதற்கன்னி!
நினைதோறும் நினைதோறும் இனிப்பதாலே
நேர் கவிதை காதல்தரும் கன்னியென்றேன்!

* * *

கவிஞரவர் உள்ளத்தில் களங்க மில்லை!
கனல் கக்கும் வேளையிலும் களங்கமில்லை!
புவியரசில் மேலான புதுவை மன்னன்
பொருந்திய நம்குடும்பத்தில் ஒருவனேதான்!

* * *

முதல் தம்பி

துன்பத்தின் மத்தியிலே பிறவானேனும்
துயர் துடைக்கும் எண்ணத்தாற் பொது
வாழ்வுற்றோன்!
சம்பத்தின் பெயர்சொன்னால் ஏதோ உள்ளில்
தனிமகிழ்வு கொள்வதனை இதயம் கூறும்!
அழகுமுகம்' பால்வடியும் இளமை! [என்ன
அகநானூ றடுக்குகிறாய் என்கின்றீரோ?]
பழகுபவர் மனைவியெனில் அகநானூறே!
பகைவர்களுக் கவ்வழகே புறநானூறும்,
நாகரிகப் பண்பாடு தேவை யென்றால்
நான் சொல்வேன் சம்பத்தைக் காண்பீரென்று!

* * *

அந்த ஒரு புன்னகையில் அர்த்தம் கோடி
அத்தனையும் திராவிடரின் வாழ்வு நாடி!
சொந்தமென நெருங்கியவர் அறிவார், அன்னான்
துளிவிஷமும் அறியாத தூய நெஞ்சை!
பழக்கத்தால் பாசத்தால் இன் குணத்தால்
படித்தறிந்து பேசுகின்ற உயர்ந்த பேச்சால்
பழக்கொத்தேபோல் இனிய நெஞ்சத்தாலே
பனிமொழியன் நம்குடும்பங் கண்ட தம்பி!

* * *

தம்பி – 2

தமிழுக்கு ஒரு பெருமை; வார்த்தை யெல்லாம்
தவழ்ந்துவரும் வேளையிலும் அழுத்தம் மிக்கும்!
அமிழ்துக்கும் அவ் அழுத்தம் உண்டென்பார்போல்
அடுக்கிவிடும் சொற்கோமான்! மன்றம் கண்டோன்
நெடுஞ்செழியப் பாண்டியனின் பெயரென்றாலே
நேரான நடத்தையொடு நீதி நிற்கும்!
கடுஞ்சுவடிக் கவிதையெலாம் கனிவாய்க்கூறும்
கலையமுதன்! ஒழுக்கத்தில் தளராத் தம்பி!
நகைச்சுவையா? எடுத்துக்கொள்! வகுப்புக்காக
நாடாளும் அமைச்சருக்கு எதிர்ப்புப் பாட்டா?
பகைப் புலத்தார் நடுநடுங்க விளக்கந்தானே!
பதறுமல்கேள்! இந்தத் தம்பி சொல்வார்!
அன்புக்கும் அறிவுக்கும் மன்றங் கண்ட
அறிஞர் நெடுஞ்செழியனெனில் யாரே ஒப்பார்!

தம்பி – 3

கதை யுரைப்பார்; கவிதை செய்வார்;
கலையரங்கில்தான் நடிப்பார்!
வதைமிகுத்த நாட்டினுக்காய்
வன் சிறையில் தவம் புரிவார்!
எதை நினைக்கும் வேளையிலும்
என் கழகம் என் கழ[illegible]
அதை மறவேன் என்றறைவார்!
ஆர்வத்தின் மொத்த உரு!
இளமீசை, புதுமீசை
என்றாலும் தமிழ் உருவில்
வளர்மீசை கொண்ட இவர்
வற்றாத கலைத்தம்பி!
நட்பினுக் கோர் பிசிராந்தை
நம் கருணாநிதி யென்பேன்!

தம்பி – 4

குறுகியதோர் உருவம்; எனிற்பரந்த உள்ளம்,
"குறள் போலும்" எனக்கூறின் மிகையாகாது!
அறிவினிலே வளங்கொண்டான்; அன்பின் ஊற்று!
'அடங்தடுத்து' நம்உள்ளில் இடம்பிடித்தோன்!
இடக்கையில் புகைமணக்கும் வெண் சுருட்டில்
எரிதீயும் சிந்தனையில் பகைகருக்கும்!
நடக்கையிலே பின்னின்று பார்த்தால், ஆகா!
நம் வீட்டுப்பிள்ளை நடைபோலிருக்கும்!
நிதியென்னில் குவையென்னில் குறைவே — அண்ணா!
நெஞ்சில் மதியழகன் நிறைவான தம்பி!

தம்பி – 5

"யார் இந்த மெக்கார்த்தி?" என்பர் சில்லோர்
"யானை வெடி வார்த்தையினன்" என்பர் சில்லோர்
"போர் கொண்ட நெஞ்சத்தான்" என்பர் சில்லோர்
"பொறுமையிலே பூமி இவர்" என்பேனே நான்.
மார்பகலம் குறைவெனினும், வளரும் எண்ணம்!
மனக்கோட்டை இலையெனினும் செயலில் மன்னன்!
நார்உரித்த வாழையென மெலிந்த மேனி
நடையெல்லாம் அடலேறும்! பார்வை அஃதே!
"நான்சொல்வேன்" எனத்துணிந்து ஒருவர் சொன்னால்
நம்பிக்கை அவ்வளவு அதிகமென்போம்!
தான்சொல்லும் எல்லாமும் தானே சொல்வார்!
சங்கதிகள் இரவல்பெறும் வழக்கமில்லை!
காங்கிரசின் கோட்டையிலே காவல் காத்தார்!
காணவந்த நண்பருடன் கோட்டை நீங்கி
தாங்கவொணா மகிழ்ச்சியிலே அண்ணாவின் பின்
தமிழ் ஒலித்த நடராசன் தங்கக் கம்பி!

* * *

நாமெல்லாம் ஒருகுடும்பம்! ஆகா! அந்த
நயமிகுந்த வார்த்தையிற்றான் என்ன இன்பம்!

[லைலா — கயஸ், அம்பிகாபதி — அமராவதி, ரோமியோ — ஜுலியட், அனார்கலி — சலிம் ………………]

கூட்டுக்குரல்

— கண்ணதாசன் —

சாக்காட்டின் அடிவாரத்திலே— எண்ணங்களற்ற இன்ப உலகத்திலே—போட்டி பொருமையற்ற பொதுவுடமைப் பூமியிலே, நீங்காத் துயில் மடுத்திருக்கும் எங்களை, மானிட ஜாதியே! நீ மறந்துவிடாமலிருப்பாயாக!

உயிரோடு உயிராகக் கலந்து விளையாடிக் கொண்டிருந்த எங்களை, இதயத்தில் மாறி மாறி இடம் பெற்றுக்கெண்டிருந்த எங்களை, சதி மனம் படைத்த தன்னலக்காரர்களால் சாய்த்துக் கிடத்தப்பட்ட எங்களை ஏ மனித சமுதாயமே! நீ யுக யுகாந்திரங்களுக்கு மறந்து விடாமலிருப்பாயாக!

காற்றிலேறி விண்ணிலேபறந்தோம்; கண்களைக் கட்டி மண்ணிலே தவழ்ந்தோம்; நாற்றிடைத் தென்றல் நடிப்பதுபோல, …லமிகுங் காதலில் மனமகிழ்வுற்…ம். களங்கமனத்தினர் ஆசை…ாக, காதலர் நாங்கள் …வினை அடைந்தோம். லட்சிய…ாதி…ளுக்குக் கோபுரங் கட்டும் …ல்ல மனிதர்களே! காதலும் ஒரு …ட்சியந்தான் என்பதை மறந்து விடாதீர்கள்!

போரிலே மாண்டால்தான் வீர சுவர்க்கம் போகலாம் என்பீர்களே; நாங்கள் இருப்பதும் வீர சுவர்க்கம்தான் என்பது இன்னும் இங்கு வராத உங்களுக்குத் தெரியுமா!

இதோ லைலா! இதோ கயஸ்! இதோ அம்பிகாபதி! இதோ அமராவதி! ரோமியோ! ஜுலியட்! சிசரும் இங்கேதான் இருக்கிறன். கிளியோபாத்ரா எங்கள் பக்கத்தில்! எல்லோரும் இங்கேதான்! இன்னும் சாகாதவர்களே! வீரசுவர்க்கம் என்ருல் 'சரித்திரம்' என்பது உங்களுக்குத் தெரியுமா?

படித்த சரித்திரத்தையும் மறந்துவிடும் பரிதாப ஜென்மங்களே! ஆடவர் பலருண்டு, அழகியர் மிக உண்டு அவனியில்; எனினும் ஒருவருக்கொருவர் என்கிற உறுதியை உயிர்போகும் வரையில் கடைப்பிடித்த எங்களை ஒவ்வொரு விநாடியும் நினைத்துக் கொண்டிருப்பீர்களாக!

மேகம் குவிந்தால் மயில் ஆடுகிறது; மரங்கள் அசைந்தால் குயில் பாடுகிறது; வசந்தத்தின் வரவை நாணல் தலைசாய்ந்து வரவேற்கிறது; புஷ்பித்திருக்கும் சோலைக்கு வண்டு அழைப்பில்லாமலே வருகிறது; சுவையோடு இசை பிறந்தால் கருநாகம் கூட அசைவற்றுப் போகிறது; ஞானமுள்ளவன் விரல் பட்டால் வீணையிலே நல்லிசை எழுகிறது; சமுத்திரத்திலே நிறைய ஜலம் இருந்தாலும் சக்ரவாகப் பட்சி பனித்துளியைத்தான் நாடுகிறது—தினசரி நிகழும் இவையெல்லாம் எங்கள் காதலை உங்களுக்கு நினைவூட்டவில்லையா?

அன்பு மலை முகட்டில், இன்பக் கடலடியில், ஆசை நதிப்பெருக்கில், காதற் பூங்காவனத்தில் எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் எங்கள் உருவம் தோன்றவில்லையா?

ஓ! உறக்கத்திலிருப்பவர்களே! எங்கள் குரல் உங்கள் காதுகளில் விழவில்லையா?

அறுபட்ட காற்றாடிபோல் அலைந்து, மரம்விட்ட இலைபோல மறைந்துவிடும் மக்கள் கூட்டமே! எங்களைப் பாருங்கள்; நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்:

"வசந்தம் உங்களைத் தழுவ வரும்போது, அசந்த நிலையில் அதை அணைத்துக்கொள்ளுங்கள்.

மாமழை உங்களைச் சுற்றி விழும் போது, மாளிகையோ, மண் குடிசையோ, 'ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவர் எனும் தோற்றமின்றி' இன்பங் காண விழையுங்கள்.

ஆடவரெல்லாம் அழகியரின் தலை கோதி மெய் சிலிர்த்திடுங்கள்; அழகியரெல்லாம் ஆடவரின் மார்பிற் சாய்ந்து மனங் குளிருங்கள்.

போட்டி உங்களுக்கு வேண்டாம்; பொருமையை மறந்து விடுங்கள்; சண்டைக்கு வேறு களம் வேண்டாம்; காதற்களம் போதும்; சச்சரவுக்கு நேரமில்லாமல் காதல் அளியுங்கள்; கண்ணீர் வரட்டும், ஆனந்தத்தில் மட்டும்! கவலை என்று அழுபவனைப் பார்த்துச் சிரியுங்கள்! மண்ணகத்திலே வாழ்கின்ற போதிலும் உங்கள் கண்ணகத்திலே கணந்தோறும் களிப்புச் சிந்தட்டும். இன்பங்கொள்ளுங்கள்; எக்காளமிடுங்கள்! 'நாளைக்கு நாம் போவது உறுதி; என்ருலும் இந்த வேளையிலே சுகம் இருப்பது உறுதி' என்று நினையுங்கள்."

பொழுது போய்க்கொண்டிருக்கிறது; பகல் நடந்துவிட்டது; மாலை வந்துவிட்டது. இதோ தென்றல் ஆகா! இன்பமயமான தென்றல்! கவலைகளை மறைப்பதற்கு 'மணமூடி' கொண்டுவரும் தென்றல்! உச்சியிற் பட்டாலும் மின்சார அலைபோல மேனியெல்லாம் பரவும் தென்றல். இதோ வந்துவிட்டது.

ஓ! தோழரே! தோழியரே! தயாராகிக் கொள்ளுங்கள். பஞ்சணையிலே மலர் தூவுங்கள்; சன்னல்களைத் திறந்து வையுங்கள்! வீணை எங்கே? மெல்லியரே! எடுத்துக்கொள்ளுங்கள்! மீட்டுங்கள்! பாடுங்கள்! காதல் கீதம் பாடுங்கள்! வீரர்களே! கேளுங்கள்! உங்கள் செவிகளிலே தேன் மாரி பெய்த தீஞ்சுவைக் கன்னியைத் தழுவத் தாவுங்கள்! அவசரம் வேண்டாம். மெல்ல வாருங்கள். வீணையை வாங்கித் தரையிலே வையுங்கள்! பூங்கரம் பற்றி புளகாங்கிதம் பெறுங்கள்; அருகிலே அணைத்… கட்டிலுக்கு வலிக்காது—ஆனலும் மெதுவாக அமருங்கள்! காதற் புருக்களே! கதவை மூடி விடுங்கள்!

நீலங்கரைத்த வானிலே கோலங் குழைத்து வந்திருக்கிறது வெண்ணிலா! அது நடந்து வந்த வேளையில் விழுந்துவிட்ட வைரங்கள் பொறுக்குவார் இல்லாமல் கிடக்கின்றன.

ஓ! காதலரே! இவற்றை நீங்கள் காணமுடியாது! ஆனலும்—கதவைத் தாளிட்ட கட்டழகரே!—இவற்றின் நினைவே உங்களுக்கு வராது!

சுவையாகச் சுவையாக இரவு போய்விட்டது. பொழுது விடிந்துவிட்டது……..

கண்ணுடி மேனியரே! நீங்கள் வெளி உலகத்திற்கு வாருங்கள்!

இதுதான் — பகல்தான்—இப்போது காண்பதுதான் உலகமா?

இல்லை……

நிச்சயமாக இல்லை……..

இரவு நீங்கள் கண்டீர்களே! அதுதான் உலகம்! அதுதான் உண்மையான உலகம்…….

பகல் வெறுங் கனவு……..

நீங்கள் விரும்பினலும் விரும்பாவிட்டாலும் தினசரி வரும் கனவு!

கனவைப் பொறுமையோடு போகவிடுங்கள்!

மாலை வரட்டும்……….ஆகா! மாலை வரட்டும்……!

மீண்டும் தென்றல் வரும்…….வரும் வரும்………தடையில்லாமல் வந்து கொண்டே இருக்கும்!

ஓ மானிட ஜாதியே! எங்கள் குரல் உன் காதுகளில் விழுந்ததா!

*

—ஆகா! ஆகா!—

பூக்கடைக்கு விளம்பரம்தேவையில்லை; சாக்கடைக்கும் விளம்பரம் தேவையில்லை!

—அறிவுத்திரன்

* * *

உண்மை வாசற்படியைத் தாண்டுவதற்குள், பொய் உலகத்தைச் சுற்றி வந்து விடுகிறது!

—அறிவுத்திரன்

* * *

ஆகாயத்திலே நட்சத்திரங்கள் பிரகாசிக்கலாம். ஆனல், பழங்கள் பூமியில்தான் பழுக்கின்றன. நட்சத்திரங்களை சாப்பிட முடியாது!

—காண்டேகர்

குழந்தை விளையாட்டு!



முடிவற்ற உலகங்களின் கடற்கரையில், குழந்தைகள் சந்திக்கின்றன. குழந்தைகள் குதித்து விளையாடி மணல் வீடு கட்டி காலிக் கூடுகளை பொம்மைகளாய் அணைகின்றன. முடிவற்ற விண்ணிலே அமைதி நிலவுகிறது; ஓய்வற்ற கடல் குமுறிக் கொண்டிருக்கிறது. இலைச்சருகுகளாலே குழந்தைகள் படகு கட்டி, ஆழ்ந்த கடலில் புன்முறுவலுடன் மிதக்கவிட்டு விளையாடுகின்றன, நீந்தத் தெரியாத குழந்தைகள்; வலை வீசத் தெரியாத வஞ்சனையற்ற குழந்தைகள்! முத்துக் குளிப்பவர்கள் முத்தெடுக்கிருர்கள். வியாபாரிகள் கப்பலில் ஓடிப் பணம்தேடுகிருர்கள்; குழந்தைகளோ கூழாங்கற்களைச் சேர்த்துச்சேர்த்து சிதறடிக்கின்றன. அவைகள் புதை பொருள்களைத் தேடவும் இல்லை; வலை வீச அறியவும் இல்லை. கடல் சந்தோஷத்தினல் கர்ஜிக்கிறது; கடற்கரை வெளுத்து மின்னுகிறது; மரண கோஷ அலைகள், குழந்தைகளுக்கு அர்த்தமற்ற பாட்டுக்களைப் பாடுகின்றன: அலையின் பாட்டு, தாயின் தொட்டில் பாட்டைப் போன்றது. குழந்தைகளுடன் கடல் கொஞ்சி விளையாடுகிறது; கடற்கரை வெளுத்துச்சிரிக்கிறது. முடிவற்ற உலகங்களின் கடற்கரையில், குழந்தைகள் விளையாடுகின்றன. வழியற்ற விண்ணில் புயல் அலைகிறது: தடமற்ற கடலில் மரக்கலங்கள் மோதி முறிகின்றன; மரணம் எங்கும் வியாபித்திருக்க, குழந்தைகள் விளையாடுகின்றன. முடிவற்ற உலகங்களின் கடற்கரையில், குழந்தைகளின் பெரிய அதிசயச் சந்திப்பு நிகழுகிறது.

— தாகூர்.

198325 சென்னை-600 008

இலக்கியத்தில் காதல்

காரை—முத்துப்புலவர்.

எங்கு நோக்கினும் காதல். எல்லா உலகிலும் காதல்—இலக்கியம் அனைத்திலும் காதல்—நாடகம் முழுவதும் காதல்—திரைப்படங்களில் பல ரகமான காதல். குடும்பங்களிலே காதல்—சோலை வெளியில் காதல்—வயல்களின் நடுவே காதல்—ஆற்றோரத்தில் காதல்—கோயில்களிலே காதல்! ஆதியுமாகி அனாதியுமாகி அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் கலந்து நிற்கிறது காதல்!

காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்! காதல் செய்வீர் உலகத்தீரே! காதல் காதல் காதல்! காதல் போயிற் சாதல்! நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம் நுண்ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே! காதல் அடைதல் உலகியற்கை! காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம். காதலை வேண்டிக் கரைகின்றேன்!—இப்படிப் பலர் காதலைப் பற்றிக் கதறியிருக்கிறார்கள்.

இதிலே சிலர், "பார்த்தான்; பார்த்தாள்—பட்டுத் தெறித்தன விழிகள். கண்ணும் கண்ணும் கவ்வி, ஒன்றையொன்று உண்டன. சாடை காட்டினான்; சிரித்தாள்—"தங்கமே" என்றான்; குனிந்தாள்—வெட்கத்தினால்...." என்பதோடு காதலை நிறுத்துகிறார்கள்.

இன்னும் சிலர், "அருகில் வந்தான்; அன்பே என்றான்; கட்டிப் பிடித்தான்; கனிய முத்தம் கொடுத்தான்......" என்பதோடு [illegible] என்று நிறுத்[illegible].

இன்னும் சிலர் தான் ரொம்ப அனுபவக்காரர்கள். கட்டிப் பிடித்ததோடு, முத்தம் கொடுத்ததோடு நிற்க அவர்கள் சம்மதிப்பதில்லை. அதுமட்டும் காதலாகி விடுமா? அல்லது எல்லையைக் காட்டாமல் காதல் முடிந்து விடுமா?

"கட்டிப் பிடித்தான்; தனபாரம் இரண்டும் அவன் மார்பில் குத்திற்று. அவன் அந்த "தொந்தரவுக்குள்ளே சுகம் கண்டான்!" இறுகப் புல்லினான். காற்றுப் போக இடமில்லை. கதகதப்பாக இருந்ததோ?—இருவரும் பிடியைத் தளர்த்தினர்—பிரிந்தனர்" என்று முடிப்பார்கள் என்று தானே நினைக்கிறீர்கள். சேச்சே! இன்னும் பாக்கி இருக்கிறதே! வள்ளுவன் சொன்னானே கௌரவமாக, "கூடி முயங்கப் பெறின்" என்று. அந்தக் காரியத்தை இவர்கள் அணு அணுவாக வர்ணிப்பார்கள்! மெது மெதுவாக, அவன் செய்த துட்டத்தனங்களை அனுபவித்துச் சொல்லுவார்கள். காதல், கலவி—சரி. அவ்வளவு தானே! என்கிறீர்கள். இல்லை. அடுத்த கட்டம்தான் ரொம்ப சுவாரஸ்யம். கலவி மயக்கத்தில் அந்த மங்கையர்கள், ரவிக்கையைச் சேலையென்றும், சேலையை ரவிக்கையென்றும் நினைத்தது; நிலா ஒளியை வெண் துகில் என்று எடுக்கப் போனது. தான் நிற்பது மாடி வீடா கீழ் இல்லமா என்று தெரியாமலிருந்தது—ஆகிய இன்னோரன்ன பிற! இவ்வளவையும் சொல்லிவிட்டு, அந்தக் கவிஞர்கள், "பொழுது விடிந்தது" என்று சொல்ல வரும் போது பிரஜா உரிமையே பறி போனதாக நினைத்து ரொம்பவும் சங்கடப்படுவார்கள். சனியன் ஏன் பொழுது விடிகிறது! என்று சலித்துக்கொள்வார்கள். காலமெல்லாம் இரவாகவே இருக்கக் கூடாதா என்று ஆயாசப்படுவார்கள். கடைசியாக, கொஞ்சமும் விருப்பமில்லாமல், பொழுது விடிந்ததை ஒப்புக்கொள்வார்கள்

இவர்களிலே — அசல் காதலுக்கே காணிக்கையாக்கப்பட்டவர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள். சிலர் வேறு விஷயம் எழுத வந்து—துடிப்புத் தாங்காமல்—காதல் பண்ணியிருக்கிறார்கள். இன்னும் சில புண்ணியவான்கள் ஆண்டவனையே காதல் நடத்தச் சொல்லிப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். இந்த மூன்று ரகப் பேர்வழிகளில் முதல் இரண்டு ரகத்தில்தான் மனிதத்தன்மை கலந்த காதல் பரிணமிக்கிறது.

சுப்ரதீபக் கவிராயர், திரிகூட ராசப்பக் கவிராயர் போன்றவர்கள், "காதலாபுரி மன்னர்கள்!" இவர்கள் மரியாதையாக விஷயத்தைச் சொல்லமாட்டார்கள் [illegible] படுமுரட்டுப் பேர்வழிகள், படிக்கிறவன், அதைச் செயலில் கொண்டுவருவதற்கு ஆசைப்படும்படி விஷயத்தைச் சொல்வார்கள். கூந்தலில் ஆரம்பித்து பாதம் வரையிலே வர்ணிப்பார்கள். ஒரு அங்கத்தைக்கூட மறந்துவிட மாட்டார்கள். என்னவோ, அவர்களுக்கு அதில் ஒரு பைத்தியம்! "கூளப்ப நாயக்கன் காதல்," "விரலி விடுதூது," "வருண குலாதித்தன் மடல்" முதலிய நூற்கள் இவர்களின் உன்னத சிருஷ்டிகள். ஆண்டவனைப்பற்றிப் பாடிய குற்றாலக் குறவஞ்சியில் கூட ஆகா! காதல் ரசம் சொட்டுச் சொட்டாக விழச் செய்திருக்கிறார்கள்!

பரணி பாடிய செயங்கொண்டார், "கடை திறப்பு"ப் பகுதியில் கூறும் காதல், ஊடல், கலவி, கலவி மயக்கம், கனவில் கூடல், அதை நனவில் தேடல் ஆகிய பகுதிகள் சுவையூறும் தேனூற்றுக்கள்!

'முத்தொள்ளாயிரத்தில்,' கிடைத்துள்ள பாடல்கள் வரையிலேயே காதல் கம கமவென மணக்கிறது.

கம்பர் மகன் அம்பிகாபதி, "காதலித்தான்; கொலை செய்யப்பட்டான். ஏதோ கொஞ்சம் கவி எழுதினாலும்" என்கிறவரையில்தான் நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆனால் அவன், அப்பனை மீறிய சுப்பன் என்பது "அம்பிகாபதி கோவை"யைப் படித்தால் புரியும். ஆள், பெரிய கைகாரன் போலிருக்கிறது. ஏன், சோழன் மகள் அவன்பால் மையலுற்றாள் என்பது கோவையைப் படித்தால் நன்றாகப் புலனாகிறது! நம் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டல்லவா காதல் கதை கூறுகிறான்! ஆனால் ஒன்று; அம்பிகாபதி சில விஷயங்களில் கச்சிதமானவனாக இருந்திருக்கிறான். ஒரே ஒரு விஷயம் சொல்கிறேனே; அவனுடைய அப்பன் கம்பன், மாதர் தனங்களைப் பார்க்குந்தோறும், மலை, குடம், இளநீர், குன்று என்றெல்லாம் "லென்ஸ்" வைத்துப் பெரிதாக்கிப் பார்ப்பானல்லவா! இவன் அப்படி இல்லை—ஒரே ஒரு பாடலில் மட்டும்! மற்றதை விடுங்கள்! தன் காதலி அமராவதியின் தனத்தை அவன் மலை, குன்று என்றெல்லாம் வர்ணிக்கத் தயாராயில்லை. ஏன். அது என்ன அளவு என்று கூடச் சொல்ல அவன் தயாராயில்லை. சுருக்கமாகச் சொன்னான்: "சற்றே பெருத்த தனமே" என்று. 'அது' ரொம்பப் பெரியதுமல்ல. சிறியதுமல்ல "சற்றே பெருத்தது" அவ்வளவுதான்! இயற்கையாக இல்லையா, இது!

இதிலே நள வெண்பா பாடிய புகழேந்தி இருக்கிறானே, அவன் ரொம்ப குஷிப்பேர்வழி, அனாவசியமாக, கதாநாயகனை ஒரே இடத்தில் நிறுத்திவைக்கமாட்டான். அவனைக் கூட்டிக்கொண்டு இவன் உலகத்தைச் சுற்றிச் சுற்றி வருவான், மரம் செடி கொடியெல்லாம் காதலில் கரைகண்டவை என்பது இவன் நினைப்பு. ஆனால், பேர்வழி நயமான உவமைக்காரன். அவனாவது அந்தரங்கம் பற்றிச் சொல்லாமல் விட்டானா? அதை [illegible] கேட்கிறீர்கள். கிழவயதிலேயே ஆசாமி வெளுத்து வாங்கியிருக்கிறான்! ஆகா! முகத்தை, வண்டு மொய்க்க வந்ததாம், கையால் தடுத்தானாம், கையையும் மலரென்று மொய்த்ததாம். துகில் விலகிக் கிடந்ததாம்...அப்புறம்...இதுபோதுமே! இனி என்ன வேண்டும்!

இவன் காலத்திலே வாழ்ந்த ஒட்டக் கூத்தன் இருக்கிறானே, அவன் சுத்த சாம்பிராணி! சூழ்ச்சி செய்வதிலேயே திரிந்திருக்கிறானே தவிர, ஒழுங்காகக் காதலைப்பற்றிப் பாடவில்லை.

ஆனால் இதிலே ரொம்ப பச்சை பச்சையாகச் சொன்னவன் காளமேகம்தான்! அவன் சுத்த ரௌடி! சண்டைக்குப் போகிற மாதிரி வர்ணிக்கிறான். குஸ்தி போடுகிறமாதிரி காதலிக்கிறான். கோபம் வந்தால் பெண்களுடைய உருவத்தை விகாரப்படுத்தி விடுகிறான். இவன் கையில் தாசிகள்தான் அல்லோலகல்லோலப் பட்டிருக்கிறார்கள். சிரங்கம் கோயில் பிரகாரத்திலேயே இவன் சுற்றித் திரிந்து பார்த்திருப்பான் போலிருக்கிறது. அந்த ஊர்க் கன்னியரையும்—அதிலும் ஐயங்கார்ப் பெண்கள் [illegible] நாகப்பட்டிணம் தாசிகளை [illegible] சந்தி சிரிக்க வைத்திருக்கி[illegible] ஒரு சில வெண்பாக்களிலே.

இவர்கள் எல்லோரிலும் ரொம்பவும் கௌரவமானவன் வள்ளுவன்தான். நயமாகவும் [illegible] நேரத்தில் ஆபாசமில்லாமலும், நறுக்காகவும் சுருக்கென்று விழும்படியும் பாடியிருக்கிறான்.

அடுத்தபடி மகாகவி சுப்பிரமணிய பாரதி நயமான காதலனாயிருக்கிறான். எளிய தமிழிலேயே அழகாகக் காதல் செய்திருக்கிறான்.

இவர்கள் அனைவரையும் கொஞ்சம் தொட்டுப் பார்ப்பது தான் இந்தப் பகுதியின் நோககம். *

m211,N54TL
N54·1·1

அழகி

அழகு மண்டிய மாது ஒரு உண்மைக் கவி; தன்னை நெருங்கி வருபவர்களுக்கு அவள் அன்பும், நம்பிக்கையும் சொல்வன்மையும் ஊட்டுகிறாள்; அவளது காதல் இயற்கையின் இங்கித இணைப்பாகும். இயற்கையின் அழகு நிரம்பிய ஒரு பெண்ணோவியமாக அவள் காட்சியளிக்கிறாள். அவளுடைய அழகு மண்டிய பார்வையும் சொல்லும், நமது குரூரப் பார்வையையும் தீயகுணத்தையும் மாற்றும் மந்திரமாய் பொலிகின்றன. மாசு படிந்த மனிதனின் மனம், அந்தப் பார்வையாலும் சொல்லாலும் உந்தப்பட்டு தன் களங்கத்தை உடனே உதறி எறிகிறது; அவனுடைய உடைந்த உள்ளம் உருப்பெற்று உற்சாகம் அடைகிறது.

—எமர்சன்.

தழுவ வாராய்!

நேசன்

ஓடி வா தென்றற் காற்றே!
உணர்ச்சியே! உழைத்துழைத்து
வாடு வார்க் குத்தேன் நீயே!
வளர்கின்ற குழந்தை தூங்கப்
பாடுவாய் பண் இன் பத்தைப்
பார்த்திடேன்..........உணர்வேன்! உன்னை
நாடுவார் களைப்புத் தீர்க்கும்
நற்றென்றற் காற்றே வாழி!

பனைமரம் உன்னைக் கண்டு
'சல சல' வென முழங்கும்!
வனமெலாம் "சிவ்" வென்றுன்னை
வாழ்த்தி நற்றமிழாற் பாடும்!
குணமுளாய் பொன்னி யோரம்
குளித்து மேடேறும் போது
நினதுடல் தழுவுவேன் என்
நெஞ்செலாம் மகிழச்செய்வாய்!

மலரிடை குதித்தாய்! வாசம்
வாரியே வானில் சென்றாய்!
குழைகின்ற காதல் நெஞ்சிற்
கொதிப்பினை ஊட்டி ஏழை
தொழிலிலே உடல் கசங்கும்
தோற்றத்தைக் கண்ட போதில்
அழுதனை! தேற்றிச் சென்றாய்
அன்புள்ளம் உருகக் கண்டாய்!

வானம் தான் கடல் நீயே தான்
வழிகின்ற 'அலை' நீர் உன்றன்
தானம் தான் புத்துணர்ச்சி
தருமின்பம் தமிழின் இன்பம்!
மோனம் தான் உனது பேச்சாய்
முடியினும் உள்ளந் தன்னிற்
கானத்தை எழுப்புகின்றாய்!
கவிதையாய் இனிக்கின்றாய் நீ!

கொங்குநாட்டுக் கோட்டையினுள்ளே
எங்கள் பாட்டு எங்கும் கேட்கும்!

இசையுடன் இயற்கைப் பேச்சும்
இயலுடன் நடித்துக்காட்டும்
நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி
உணர்ச்சியால் உயர்ந்த தம் நடிப்பினிலே
உள்ளங்கள் கவர்ந்துவிட்ட
உயர்கலைஞர் சிவாஜி கணேசன்
சேர்ந்து நடிக்கும்
இணையற்ற திரைப்படக் காவியம்!

நரசுவின்
துளிவிஷம்
டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி.

மற்றும் — அழகி, விளையாட்டுப்பொம்மை

பூத்துக் குலுங்கும் பொன்மலர்க்
காடு; பார்த்தால் பசிதீரும்!

காதல்! காதல்! காதல்!
காதல் போயிற், காதல் போயிற்
சாதல்! சாதல்! சாதல்!

பாடும் குயில்! ஆடும் மயில்!
பரவசம் தரும்

கேரளத்து முத்தாரம்!
தீந்தமிழின் கலைக்கூடம்

"அகமும் புறமும் அழுக்கில்லா
மல் ஆணும் பெண்ணும் ஒன்றாய்
உலகை சுத்தம் செய்யணும்"

மணமேடை பலிபீடமா?—சூடும்
மலாமாலை விஷ நாகமா?

சின்னசசின்ன வீடுகட்டி சிங்கார
வீடுகட்டி பொண்ணு மாப்பிள்ளை
வச்சு ஆடுவோம்!

அன்பும் அறனும் உடைத்தாயின்
— இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது!

"தள்ளாத காலத்தில்
கல்யாணமா? தாத்தா உனக்கிது
சரியாகுமா?"

"நப்பா! நீ ரொம்ப
அட்வான்ஸ்லெ போய்ட்டெடா!
அம்பிகாபதி தம்பிடா நீ!"

சின்னப்பா — கண்ணாம்பா
நடித்த
மங்கையர்க்கரசி

மகாலிங்கம் — ராஜம்மா
நடித்த
லைலாமஜ்னு

மகாலிங்கம்—வரலட்சுமி
நடித்த
ம[illegible]ரேகை

லலிதா — பத்மினி
கலைவாணர் — மதுரம் நடித்த
மணமகள்

லலிதா — பத்மினி
நடித்த
சிங்காரி

பத்மினி — கணேசன்
கலைவாணர் — மதுரம் நடித்த
பணம்

லலிதா — பத்மினி
நடித்த
மருமகள்

பத்மினி — கணேசன்
ராஜகுமாரி நடித்த
அன்பு

சரஸ்வதி — மனோகர்
நடித்த
ராஜாம்பாள்

பத்மினி — கணேசன்
ராமச்சந்திரன் நடித்த
கல்யாணம் பண்ணி
—யும் பிரம்மச்சாரி

கோயம்புத்தூர் பிக்சர்ஸ் லிட்.
ஜெயில் ரோட்... கோயம்புத்தூர்...

மலர மலர... குளிரக் குளிர... மணக்க மணக்க...... மகிழ மகிழ...

இளந் தென்றல்....இன்பத்தைக் கலந்து, குளுமையைக் குழைத்துத் தவழ்ந்து கொண்டிருந்தது, அந்தப் பூங்காவிலே! அதிலே காதற் பண்ணமைப்பிலே உருவெடுத்து எழில் பொங்கித் ததும்பிய பருவக்குமரிகளின் களியாட்டம், வண்டினை நோக்கி வெறியாட்ட மாடிய வண்ண மலர்களுக்கே வெட்கத்தைத் தந்தது!

அந்தத் தங்க நிறப் பெண்கள் எழுப்பிய தமிழிசையைத் தழுவியபேச்சொலியிலே மதிமயங்கிக்கிடந்தனர், வீரத்தைநெஞ்சில் குவித்து, வைரமேறியத் தோள்களை தோகை மயிலாள்களிடம் ஈடுவைத்திருந்த ஏறுநடை காளையர் பலர்!

கவிதை உரு கன்னியரின் செஞ்சிவப்புக் கன்னத்திலே காவியம் உருவாக்குவோர் ஓர் பக்கம்...கரிய நிறக் கூந்தலிலே ஆழ்கடலின் கருநிறத்தை எண்ணுவார் மறுபக்கம்...கொம்புத் தேன் குறு இதழில் தமிழ் வேந்தன் தலைமுடியில் ஒளிவீசும் சிவப்புக் கற்களை மதிப்பிடுவோர் வேருேர் புறம்....அங்கே கவிஞன் காதல் கவிதை பொழிந்தான்! முத்துப் பறிப்பவன் சிருங்காரக் கடல் மூழ்கினன்; வணிகன் காதல் வனத்தில் நடை பயின்ருன்!

கொந்தளித்தெழும் காதல் பெருக்கை பறையடித்துத் தெரிவித்தது அந்தப் பூங்கா!

அந்தக் காதலரின் தாய்—அவர்களைப் பெற்றெடுத்த மாதா [illegible] மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு அவள் கன்னங்களிலே ஆனந்த நீராக வழிந்தோடியது! தான் ஈன்றெடுத்த வைரச் செல்வங்கள் இன்பச் சுழலில் சுழல்வதைக் காண்பதிலே அவளுக்கு மகிழ்ச்சி........ தாயின் உள்ளம் அது!

நீல வானத்தை முட்டிக் கிழிக்கும் மாட மாளிகைகளிலே மகிழ்ச்சி ஊஞ்சலாடிய மாந்தர்! கூடகோபுரங்களிலே நாட்டையாள அவை அமைத்த வேந்தர்! மலைக் கூட்டங்களிலே தேனை மொண்டு மூலிகைக் கொத்தி நின்ற வேடர்! நீலத் திரைகடலோரத்திலே நாவாய்க்கு நங்கூரம் பாய்ச்சி எழுந்த வணிகர்! எங்கே நோக்கினும் நெஞ்சை இனிக்க வைக்கும் தோற்றம்! எப்பக்கம் பார்க்கினும் மனதை மகிழவைக்கும் மக்கள் ஏற்றம்!

தாய் பார்த்தாள்....பார்த்தாள்........பார்த்து பரவசப்பட்டாள்! அவள் மனதிலே குயில் பூபாளம் பாடியது; மயில் நிருத்தியம் ஆடியது! அவளுக்கு ஒரே களிப்பு! மகிழ்ச்சி!

'உலகமே! பார் என் மைந்தர்களை! எவ்வளவு ஆனந்தமாக அவர்கள் வாழ்கிருர்கள்! எத்துணை மகிழ்ச்சியோடு பாடுகிருர்கள்! ஆடுகிருர்கள்! என் பெற்றெடுத்த நல்வயிறு குளிர்ந்துவிட்டது! ஈன்றெடுத்த என்னுள்ளம் மகிழ்ந்து விட்டது........இந்த மகிழ்ச்சி என்றென்றும் நிலைக்குமா? வீசும் இளந்தென்றல் எப்போதும் நிலையாக வீசிக் கொண்டிருக்குமா?'

உவகை உந்தித்தள்ளிய மகிழ்ச்சிப் பெருக்கிலே இப்படி வார்த்தைகளை உருவாக்கி உலகிடம் கொட்டினுள் மாதா! உலகம் சிரித்தது........

'ஏன் சிரிக்கிருய், எதற்காகச் சிரிக்கிருய்?' அன்னை கேட்டாள் விந்தை கலந்த குரலிலே!

'பேதைப் பெண்ணே! என்னையே கதிகலங்கடிக்கும் விதத்தில் ஒரு கோரப் புயல் உருவாகி விட்டதடி மகளே! அதோ பார் அந்தப் புயலை! பாரடி கண்ணே நன்ருக.......! தெரியவில்லையா உன் கண்களுக்கு, அந்த நாசகாரப் புயல்? அதோ, நீ அமைத்திருக்கும் அந்தக் கணவாய் வழியாக நுழைகிறதே, காணவில்லையா உன் கண்கள்?' என்றது உலகம் உரத்தக் குரலிலே!

அன்னை பார்த்தாள்...உலகத்துப் புழுதியை யெல்லாம் ஒன்று கூட்டி வாரியடித்து ஆத்திரத்தோடு அழிப்பு வேகத்தில் கணவாய் வழியாக நுழைந்து கொண்டிருந்தது புயல்...நாசகாரமான புயல்! அன்னை திடுக்கிட்டுக் கண்ணை மூடிக்கொண்டாள்! மீண்டும் அவள் கண் திறப்பதற்குள்.......

அய்யோ! என்ன கோரம்! என்ன அவலம்! ஆகாயத்தை [illegible] புரங்கள் எங்கே? அவற்றிலே மகிழ்ச்சியோடு ஊஞ்சலாடிய மாந்தரெல்லாம் எங்கே? பூங்காவிலே காதலில் பூத்துக்கிடந்த பூவையரெங்கே? காளையரெங்கே? எங்கே? எங்கே....?

எல்லோரும் புயல் கிளப்பிய புழுதியிலே மூடிப்போய் விட்டனரா? மண்மேடாகி விட்டனரா? அய்யோ! அழிந்துவிட்டதா அவர்கள் இன்ப வாழ்வு?.......

ஆம்......மாளிகைகள் இடிந்து கிடந்தன....கோபுரங்கள் சரிந்து கிடந்தன...மக்கள் மடிந்துகிடந்தனர்....எங்கும் அலங்கோலக் காட்சி! வேதனை நிகழ்ச்சி! பிண நாற்றம்! ஒரே அழுகல் வாடை!

புயல் சிரித்தது....அந்தச் சதிகாரப் புயல் அழிப்பு வெறியில் வெற்றி கண்டதை நினைத்து நினைத்து உரத்துச் சிரித்தது! சிரித்துச் சிரித்து அன்னையின் நெஞ்சை சிதைக்கவைத்தது!

'முல்லைக்காடா நீ, முட் புதராக்கிவிட்டேன் உன்னை! பளிங்கு நீரோடையா உன் வாழ்வு, பாசி பிடித்த சாக்கடையாக்கி விட்டேன்.......'

அகங்காரத்தோடு பேசி இடி போல நகைத்தது புயல்!

புயல் யாரையும் வாழவிடவில்லை—வாழ முயன்றவர்களை வெட்டி வீழ்த்தியது! ஆனல் அது மட்டும் தாராளமாக வாழ்ந்தது! நினைத்ததையெல்லாம் அடைந்தது.......

வானத்தில் எங்கும் இருண்ட மேகங்கள்.......நிலவுப் பெண் இல்லை, விண்மீன்கள் ஒளிவிடவில்லை—ஒன்றுமே இல்லை! வெறும் இருள்....வேதனைக் குரல்!

'உலகமே! என் வாழ்க்கைப் புயல் புகுந்த பூஞ்சோலையாகி விட்டதே! எழில் சித்திரம் எனது மக்கள்—அவர்கள் சிதைந்துவிட்டார்களே! எல்லா வளமும் இருக்கிறதே என்னிடம்—இருந்தும் சதிகாரப் புயலால் வாடிவிட்டதே! இனி என் வாழ்வு வளம் பெருதா? எனது மக்கள் உயிர் வாழ முடியாதா?

ஏங்கி இதயம் உடைய வீறிட்டு அழுதாள் மாதா!

'சோக ஓவியமே! கலங்காதே! ஓய்வு ஒழிவின்றி என்றுமே புயல் வீசிக்கொண்டிருக்காது—வீசவும் முடியாது! அதோ பாரடி என் அன்பு மகளே, உன் செல்வக் குழந்தைகள் இருவரை! அவர்கள் புயலை அழிப்பார்கள்—புது வாழ்வு வாழ முயற்சிப்பார்கள்!' என்று உலகம் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினுள் தாய்.......

வெண்தாடியோடு ஒரு பளிங்கு நிற கிழ உருவம்...அவர் பக்கத்தில் அரும்பு மீசையோடு ஓர் வாலிபன்!

'கண்ணீர்க்காரியே! கண்டாயா அந்த வீரச் செம்மல்களை? புயல் ஒடுங்கிவிடும் இனி—இனியும் அதன் வேகம் நில்லாது! [illegible] விடும்....' என்றது வையகம்.

மாதா மகிழ்ச்சியோடு நோக்கினுள் அந்தக் குழந்தைகளை....

'மாதா! என் திராவிட மாதா! இனி நீ துயர் படாதே—துடைத்துவிட நாங்களிருக்கிருேம்! புயல் கிளப்பிய நாசத்தை வேரோடு களைந் தெறிவோம்! மீண்டும் நீ அந்தக் காதற் பூங்காவைக் காணலாம்! மாட மாளிகைகளிலே மகிழ்ச்சி மாந்தரைக் காண்பாய்! ஆனல் கூட கோபுரங்களிலே வேந்தரைக் காண மாட்டாய்—மக்கள் பிரதிநிதிகள்—உன் மைந்தர்களாலே தேர்ந்தெடுக்கப் பட்டோரைப் பார்ப்பாய்! நீலத் திரைக்கடலோரத்திலே மீண்டும் உன் நாவாய்கள் நங்கூரம் பாய்ச்சி நிற்கும் தாயே! உலகம் உன்னை மதிக்கும் அன்னையே, உலகம் உன்னை மதிக்கும்! உன் புதல்வர்கள் மகிழ்ச்சி உலகத்தில் வாழப் போவது உறுதி....''

'உறுதி! உண்மையாகவா, என் கண்மணிகளே?' தாய் கேட்டாள் ஆவலோடு!

'ஏன் சந்தேகம்? உன் மீது ஆணை! கற்றுக்கொடுத்த மொழியின் மீது ஆணை! புயல் ஓய்ந்துவிடும்—அழிந்துவிடும்—ஒழிந்துவிடும்....' வீறுகொண்டு பேசினுன் வீர இளைஞன்!

'ஆம்.......தாயே!' என்ருர் கிழவர்—அந்த வெண்தாடி வேந்தர்!

தென்றல் பிறந்தது...........

ஆம்—புயல் மறைவதற்கு முதல் அறிகுறி தென்றல்.......ஆனல் தவழ்ந்த தென்றலிலே நறுமணம் கமழவில்லை! புயல் தந்த வேதனை நாற்றம் வீசியது!

வீசும் நாற்றத்தை சிறிது சிறிதாக ஒழித்து மீண்டும் அந்தப் பூங்காவின் பூக்கள் மணத்தை வாரியிறைக்க முயற்சித்தது தென்றல்........ அதன் முயற்சிப் பாதையிலே உயிரைக் கொடுத்தோர், இரத்தத்தைச் சிந்தியோர் எத்தனைபேர்!

மாதா கறுப்பு நிற சேலை உடுத்திருந்தாள்—அது அவள் வாழ்வின் சோகத்தைக் காட்டியது! அவள் சிவப்பு நிற ரவிக்கை அணிந்திருந்தாள்—அது அவள் கடந்த கால சோபிதத்தைக் கூறியது! அவள் தென்றலின் முயற்சியைக் கண்டாள்—கண்டவளின் தாயுள்ளம் உவகையடைந்தது; மறுபடியும் நாம் இன்ப வாழ்வு வாழ்வோமென்று எண்ணி மகிழ்ச்சி கொண்டது!

அவள் செவியிலே உலகம் சொன்ன உறுதிமொழி ஒலித்துக் கொண்டேயிருக்கிறது...' ஓய்வு ஒழிவின்றி என்றும் புயல் வீசிக் கொண்டிருக்காது — வீசவும் முடியாது.'

—அண்ணு அன்பன்

* * *

எதிர்பார்க்கக்கூடிய செய்திகள்!

எல்லாத் திரைப் [illegible]ங்களும் தியேட்டர்க[illegible]குள் ஓடுவதால், மகாலிங்கத்தின் விளையாட்டுப்பொம்மை கோபப்பட்டு, தியேட்ட[illegible] விட்டு ஓடிவிட்டதாம்!

●

சென்னையிலே ஒருபிரபல தொழிற்சாலை அதிபர், தன் கீழ் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு இலவச டிக்கட் வாங்கிக் கொடுத்து 'புதுயுகம்' படம் பார்க்கக் கூட்டிக் கொண்டு போனராம், படம் பார்த்துவிட்டுத் திரும்பிய தொழிலாளிகள், படம் பார்த்த மூன்று மணி நேரத்திற்கும், 'அதிகக் கஷ்டமான ஓவர் டைம் கூலி' கேட்டார்களாம். 'சாயி காளுமிர்தா பிக்சர் ஸில்' வாங்கிக் கொடுப்பதாக முதலாளி சமாதானம் கூறினராம்!

* * *

இப்படிச் சொன்னுல்?

பின் வாசல் பகுதிக்கு, ஏன் ''ராஜாஜி கேட்'' என்று பெயர் வைக்கக்கூடாது?

●

எல்லா மந்திரி சபையிலும் சேரும் பக்தவத்சலத்துக்கு ஏன் 'ஜோக்கர்'என்று பெயர் வைக்கக்கூடாது?

●

'வெள்ளி மூக்குக் குதிரை'களின் 'இனிமை'யான சங்கீதத்துக்கு, ஏன் '' கேஸ்கரின் சாஸ்திரீய சங்கீதம் '' என்று பெயர் வைக்கக்கூடாது?

(வழி—குமுதம்)

கஷ்டமே கிடையாது!

— ரா. சு. கி. —

எனக்கு எவர் மீதும் பொறாமை கிடையாது என்று நான் நம்பியிருந்தேன். ஆனால் இப்போது நமது மந்திரிகள் பேரில் எனக்கு பொறாமை ஏற்பட்டு விட்டது போல் எண்ணத் தோன்றுகிறது.

காரணம் இதுதான் :—நானும் ரொம்ப காலமாக யோசித்துக் கொண்டே இருக்கிறேன், அடிக்கடி ஏதாவது ஒரு ஊருக்குப் போய் வரவேண்டும் என்று. கன்னியா குமரி போகவேண்டும்; திருக்குற்றாலம் போய் வரலாம்; உதகமண்டலம்,கோடைக்கானல் இப்படி என்னென்னவோ இல்லையா; அங்கெல்லாம் போய், 'சும்மா ஹாயாக'ச் சில தினங்களை ஓட்டி அடைத்து விட்டு வர வேண்டும். இது எனது ஆசைகளில் ஒன்று.

ஆனால், எனது மணிப்பர்சும் [illegible]ன்னைப் போலவே மெலிந்து [illegible]க்கிறது. அதனால் 'இஷ்டம் போல் பிரயாணம்' போக முடி[illegible]வில்லை.

ச[illegible] நெடும் போக்காகப்போக [illegible]வண்டியதில்லை; அருகாமை[illegible]ல் உள்ள காஞ்சீவரம், [illegible]ருத்தணி, திருப்பதி முதலிய [illegible]களுக்குப் போகலாமே. [illegible] 'மாதம் ஒரு ஊர்; சில நாள் டூர்'—இந்த விதமாக ஒரு திட்டம் வகுத்தேன். அது கூட உருப்படவில்லை. 'பைஸாக்கள் தட்டுப்பாடு' தான் திட்டம் மட்டம் போட்டு விட்டதற்குரிய காரணமாகும்.

ஆனால், மந்திரிமார்களைப் பாருங்கள்! எப்பொழுதும் எங்காவது போய் வந்துகொண்டிருக்கிறார்கள். மாதம் முப்பது நாட்களில் இருபத்து மூணே முக்காலே அரைக்கால் தினங்கள் மந்திரிகளில் அநேகர் தலைநகரில் இருக்கமாட்டார்கள் என்றே நினைக்கிறேன்.

அங்கே மகா நாட்டுக்குத் தலைமை வகிக்கிறார்; ஒரு ஊரிலே பாலத்தைத் திறந்து வைக்கிறார்; இன்னுமொரு ஊரிலே ஏதாவதொரு கட்டிடத்தைத் திறந்து வைக்கிறார்; ஒரு இடத்தில் அஸ்திவாரக்கல் நாட்டுகிறார்; வேறொரு இடத்தில் பஜனை மடத்தின் விழாவில் கலந்து கொள்கிறார்—இவ்விதம் ஏதேனும் ஒரு மகத்தான திருப்பணி சம்பந்தமாக மந்திரிகள் ஓய்வு ஒழிச்சல் இன்றி ஊர்சுற்றுகிறார்கள்.

இன்று சென்னையில் ஆஸ்திக மகாநாட்டில் அருளுரை; நாளை மதுரையில் கால் நடைக் கண்காட்சியில் பேருரை; அடுத்த நாள் சேலத்தில் உணவுப் பெருக்க மாநாட்டில் உபதேசம்; மறுநாள் தூத்துக்குடியில் மீன் பிடிப்போர் பேரவையில் பிரசங்கம்; இன்னொரு நாள் காஞ்சிவரத்தில் கைத்தறி நெசவாளர் மகாநாட்டில் பேச்சு; அப்புறம் தென் காசியில் விவசாயிகள் மகா நாட்டில் விரிவுரை; அடுத்த வாரம் அகில இந்திய ரேடியோவில் ஐந்தாண்டு அபிவிருத்தி பற்றி அளப்பு; மறு நாள் கன்னியா குமரியிலே இலக்கிய மகாநாடு.........(உதாரணத்துக்குக் குறிப்பிடுகிறேன். உண்மையான 'நிகழ்ச்சி நிரல்' எதையும் அருகே வைத்துக் கொண்டு எழுதப் பட்டதல்லை இது.)

இவ்வித சகல விஷய சமய சஞ்சீவிகளாக விளங்கும் சக்தி நமது மந்திரிமார்களுக்கு இருக்கிறது. ஆகவே நமது மந்திரிகள், ஆட்டு உரத்திலிருந்து ஆத்மிக விஷயம் வரை எந்தப் பிரச்னை எழுந்தாலும் பெரும் பேச்சுப் பேசித் தீர்த்துக் கட்டிவிடும் சூரர்கள். அவ்விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்காக அவர்கள் 'மெய்வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண் துஞ்சார்'; எவ்வளவு தூரமாயினும் அஞ்சார், உடனே பிரயாணம் தான். ஆகையினாலே நாட்டின் கிழக்கே இருந்து வட மூலைக்கு ஓடுவார்கள்; அங்கிருந்து தென் திசைக்கு விரைவார்கள்; பிறகு தலை நகர் வருவார்கள்; மறுபடி 'நீராவி இயக்கத் துரித ஓட்ட இருப்புப் பாதைத் தொடர் வண்டி'யிலே [illegible] (பயப்படாதீர்கள்! எக்ஸ்பிரஸ் டிரெயின் தான்) வேகப்பயணம் போவார்கள்.

அவர்களுடைய காலம் கரியாகிறதே என்று பொதுஜனம் கவலைப்பட வேண்டியதில்லைதான். ஆனால், 'நாம் கொடுக்கிற வரிப்பணத்திலே பெரும் பகுதி இப்படியா கரியாக வேண்டும்?' என்று அவர்கள் எண்ண வேண்டும். ஓங்கிக் கேட்கவும் உரிமை உண்டு.

சொந்தப் பணமாக இருந்தால், மந்திரிமார்கள் இப்படி மாதத்திலே பெரும்பகுதி நாட்களை ஊர் சுற்றும் வேலையிலேயே கழிப்பார்களா? பயனற்ற மகா நாடுகளிலும், திறப்பு விழாக்களிலும் வெறும் பேச்சுப் பேச ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஓடத்தான் தயாராக இருப்பார்களா? உம்மையும் நம்மையும் போல் 'பைஸாக் கணக்கு' பார்த்து விட்டு, 'இப்ப என்னங்நேன் அவசரம்? அடுத்த மாசம் பார்த்துக் கிடலாமுங்நேன்!' என்று தட்டிக் கழிக்க மாட்டார்களா? 'அசலாத்து நெய்' என்றால், ஒரு கரண்டி என்ன; ஒன்பது கரண்டி கூட அள்ளி ஊற்றிக் கொள்ளலாம். இல்லையா?

தமிழ் நாட்டு மந்திரிகள் மாத்திரம் அல்ல; ஆந்திராவிலும் இதே கதைதான்; அகில இந்தியாவிலும் இதே் வரலாறுதான்!

நேருஜீயின் சில மாதச் செயல்பற்றி ஆராய்ந்து பாருங்களேன். காஷ்மீர் அருகில் இருப்பார்; திருவனந்தபுரத்துக்குப் பறப்பார்; டில்லியிலே பவனி வருவார்; சிதம்பரத்துக்குச் செல்வார்; பம்பாயிலே காணப்படுவார், ஒவ்வொரு கூட்டத்திலும் குறைந்த பட்சம் ஒன்றரை மணி நேரமாவது அழகாக — அற்புதமாக — அபாரமாக — பிரமாதமாகப் பேசி இருப்பார். 'பேச்சைக் குறையுங்கள்; செயல் புரியுங்கள்! ஊர் சுற்றுகிறீர்கள்; உழைப்பிலே ஈடு படுங்கள்!' என்றும் போதிக்கத் தவறமாட்டார்.

இதுதான் மந்திரிமார்கள் செய்ய வேண்டிய வேலை என்றால், நீரும் நானும் ஏனய்யா மந்திரியாக மாற ஆசைப்படக் கூடாது? தாராளமாக ஆசைப்படலாம். மந்திரியாக வாழ்கிறவர்கள் மீது பொறாமையும் கொள்ளலாம்.

முன்பெல்லாம், 'அவனுக்கென்ன? ராஜா மாதிரி இருக்கிறான்' என்று சொல்வது வழக்கம். இந்தக் காலத்திலே ராஜாக்களுக்கு மதிப்பும் கிடையாது; அமைதியும் கிடையாது! ஒரு எழவுமே கிடையாது. 'மந்திரிகள் பாடு தான் தேவலாம்' என்று தோன்றுகிறது. அதனாலே, 'அவனுக்கென்ன? மந்திரி மாதிரி வாழ்கிறான்' என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் பொருத்தமானது. காலத்துக்கு ஏற்றதும் கூட.

மந்திரியாக வேலை பார்ப்பது கஷ்டமான காரியம் அல்ல. முன்பாவது, ஜரிகைத்தலைப்பா, ஸ்பெஷல் டிரெஸ், விசேஷ நடை [illegible] என்றெல்லாம் தேவைப்பட்டது. இப்ப அந்த 'அக்கப்போர்' கூடக் கிடையாது. 'ஸிம்ப்ளா' வீட்டிலே இருக்கிற மாதிரியே ஆட்சி மண்டபத்திலும் வீற்றிருக்கலாம்; நாட்டின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் போய் வரலாம். மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் எப்பவாவது கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படலாம். அது கூடப் பெரிய விஷயமல்ல. 'டக் டக்'கென்று பதில் சொல்லக் கூடிய ஒரே ஒரு நபர் மந்திரி சபையில் இருந்தாலும் போதும்.

ஆகவே—

மந்திரிக்கு ஜே! மந்திரிமார்கள் வாழ்க! மந்திரிசபை வாழ்க வாழ்கவே! *

திருப்பதியில் கை வைத்துவிட்டார்கள்!

திருப்பதியில் கைவைத்து விட்டார்கள்! திகைக்காதீர்கள்! உண்மைதான். திருப்பதி தேவஸ்தானத்தார்தான் கை வைத்திருக்கிறார்கள். ஆமாம்! ஆண்டவனின் கையை புதுப்பித்திருக்கிறார்கள் — புதுக்கை வைத்திருக்கிறார்கள். புதுக்கை! அக் கை எதனால் செய்யப்பட்டது மண்ணாலா... அல்ல, செம்பாலா?.... அல்ல, வெள்ளியாலா.... அல்ல; தங்கத்தால், வைரத்தால்,மாணிக்கத்தால். அதன் மதிப்பு ஆயிரமா? பதினாயிரமா? அல்ல! அல்ல! ஆயிரம் பதினாயிரம் போதுமா அந்த ஆண்டவனுக்கு; அந்த ஆண்டவனின் கை செய்ய செலவிடப்பட்ட மதிப்பு இரண்டரை இலட்சமாம். இது சரடல்ல! உண்மை; உண்மை; உண்மையேதான்.

இந்தியா ஏழை நாடு — விவசாயிகள் வாழும் வறண்ட நாடு— அந்த நாட்டிலேதான் ஆண்டவனின் கைக்கு இரண்டரை இலட்சம் செலவிட்டிருக்கிறார்கள்.

நாட்டை நடத்த நாடாள்வோருக்குப் பணமில்லை! கடன் வாங்குகிறார்கள் — பிற நாட்டாரிடம் பல்லைக் காட்டுகிறார்கள்; ஆனால் அவர்கள் நாட்டில் ஆண்டவனின் கைக்கு இரண்டரை இலட்சம் செலவிடப்படுகிறது. இது நியாயமா? அடுக்குமா?

இக் கைகள் செய்யப்படும் பணத்தால் எத்தனை ஏழைகளுக்கு வாழ்வளிக்கலாம்; கல்வி புகட்டலாம்; மருத்துவ வசதி செய்யலாம். அந்த எண்ணம் ஏனோ ஆண்டவனின் ஆலய நிர்வாகிகளுக்கு எழவில்லை. எப்படி எழும்? அவர்கள் ஏழைகளின் நிலையை உணர்ந்தால்தானே. அவர்களுக்குத்தான் ஏழை நிலை வரச்செய்யாத ஆண்டவனிருக்கிறானே........! ஆலயம் இருக்கிறதே.......!

நாட்டிலே பணமில்லை என்று சொல்லி — நாங்கள் ஏழைகள் என்று கூறி-ஐந்தாண்டுத் திட்டத்தைக்காட்டி அழுது–பிறநாட்டாரிடம் பணம் வாங்கியிருக்கும் சர்க்காரே! உன் நாட்டில் ஆண்டவனின் கைக்கு இரண்டரை இலட்சம் செலவிடப்பட்டதை அந்நாட்டார் கேள்விப்பட்டால் சிரிப்பார்கள்—காரி உமிழ்வார்கள்.

— முத்துராமன்

● வசந்தத்திலே மிதந்துவரும் தமிழ்நடை!
● மலை அருவிபோல் வளரும் கதைப்போக்கு
● புத்தம் புதிய உவமைகள்!
● பொருள் பொதிந்த கருத்துக்கள்!

ஈழத்து ராணி

கவிஞர் கண்ணதாசன் தீட்டியது

விலை ரூ. 1—0—0

விவரங்களுக்கு:—

அருணோதயம்

புத்தகம் வெளியிடுவோர்

சென்னை–14

இவனன்றே கவிஞன்

இப்போது கவிதைகளுக்கு ஏக கிராக்கி; எங்கு பார்த்தாலும் கவிதை; யாரைப் பார்த்தாலும் எழுதுகிறார்கள். கவிதை இலக்கியம் இப்போது சூறாவளியில் பறந்து கொண்டிருக்கிறது. எழுதும் ஆசை பலபேரைப் பிடித்திருக்கிறது. தினசரி பத்திரிகைகளில் கவிதைகள் வெளி வந்த வண்ணம் இருக்கின்றன. ரொம்பப் பேர் நன்றாகவே எழுதுகிறார்கள்.

* * *

கவிக்காடு தமிழ் நாடென்றேன். முன்பும் இந்தக் கதை தான். முன்பெனச் சொன்னால், மூண்ருன்டு, முப்பது ஆண்டு, மூந்நூறு ஆண்டு மூவாயிரம் ஆண்டு எல்லாம் முன்புதான். அதிலே பலநூறு கவிகள் வாழ்ந்தார்கள், அதில் பலர் புதுப்புது முறைகளில் கவிபாடத் துவங்கினார்கள். ஆனால் யாரும் இலக்கணம் தேவையில்லை என்று ''வசன கவிதை''யில் ராஜ நடை போடவில்லை.

* * *

காளமேகம் நல்ல கவி. ஆனால் சாகும் வரை அவன் சில்லறைக் கவிகள்தான் இயற்றியிருக்கிறான். நூற்றுக்குத் தொண்ணூற்று எண்பது வெண்பாக்களே! சீர், தளை, எதுகை, மோனை, கூவிளங்காய்: மாவிளங்காய்—எந்த இலக்கணமும் தப்பாது அவனிடம்.

ஒரு முறை ஒரு நண்பன் காளமேகத்தைப் பார்த்து ''ஒன்று இரண்டு என்ற எண்களை வைத்து ஒரு வெண்பா—இலக்கணம் தப்பாமல்—வேறு வார்த்தை சேர்க்காமல் எழுதும் பார்ப்போம்'' என்றான். காளமேகம் 'சட்' டென்று ஏடும் எழுத்தாணியும் எடுத்து எழுதினான்.

ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு
ஒன்பது பத்துப் பதினொன்று—பன்ன
இரண்டுபதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழுபதி னெட்டு

—கச்சிதமான வெண்பா!

மற்றொருவன் காளமேகத்தைப் பார்த்து, 'த'கரத்திலேயே ஒரு பாட்டு—வெண்பா எழுதச் சொன்னான். 'த' ஜாதியைத் தவிர வேறு ஜாதி புகக் கூடாது என்றும் சட்டம் போட்டான். அதற்குத்தான் சளைத்தானா காளமேகம்! எழுதினான்.

தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூததே!—தாதொத்த
துத்திகக் காதே துதித்துத்தேத் தொத்தீது
[illegible]தாதித் திதி!

தித்தித்த [illegible] தூதோ தீது—அடி

உரை:—தாதி [illegible]ன் தூது பயன் மைப் பெண்ணி[illegible] படாது – தீமைபயப்ப[illegible] தத்தை தூதோ தாது—கிளி போய்த் தூது சொல்லாது; தூதி தூது தொத்தித்த தூததே—தோழியின் தூது நாட் கடத்தி வைக்கப்பட்ட தூதாகும்; தேதுதித்து தொந்து தீதி— தெய்வத்தை வழிபட்டுத் தொடர்தல்: பயனற்ற செயலாகும்; தாதொத்த துத்தி—பூந்தாது போன்ற தேமல், தத்தாதே—என் மேற் பாய்ந்து அதிகப்படாமல், தித்தித்தது ஓதித்திதி—இனிமையான தலைவன் பெயரை இப்பொழுதே சொல்வாயாக!

கருத்தை உள்ளடக்கி, தமிழில் எவ்வளவு வார்த்தைகள் ஒவ்வொரு ஜாதி[illegible] றன என்[illegible]லும் இருக்கின் [illegible]பதை விளக்கி விட்டான், காளமேகம். 'த'னாவிலேயே பேசலாம்; 'ம'னாவிலேயே பேசலாம்; வேறு எழுத்துக்கள் எதற்கு என்ற துணிவு வருகிறதா இல்லையா, நமக்கு?

இதை ஆங்கிலேயர்கள் கணித முறைக் கவிதை என்பார்கள். அதாவது கணக்குப்போட்டு, கோடு பிரித்து வைத்துக்கொண்டு எழுதுவதாம். எதுவாயிருந்தாலென்ன; சரக்கு நயம்—அதிக அறிவுள்ளவன்தான் எழுத முடியும், இதுபோல!

—காரைக்குடி நாராயணக்கவி

நேருவின் சொந்தக்காரன்!

காஷ்மீர் போர்முனையிலே, ஒரு வடநாட்டுச் சிப்பாயும், தென்னாட்டுச் சிப்பாயும் கூடாரத்தில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். கொசுக்கடி அதிகமாக இருந்தது. தென்னாட்டுச் சிப்பாய் ஒரு யோசனை சொன்னான். அதன்படி இருவரும் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் சில மின்மினிப் பூச்சிகள் உள்ளே பறந்தன. உடனே வட நாட்டுச் சிப்பாய் அவசர அவசரமாகச் சொன்னான்; ''அண்ணே! அண்ணே! நாம் போர்த்திக் கொண்டு விட்டதால், நம்மைக் கண்டுபிடிக்க, அந்தக் கொசுக்கள் விளக்கு எடுத்துக்கொண்டு வருகிறதுகள்!''

காதல் லாகிரி

அழகியே! உனது கூந்தற் புயல் இடி இடித்தது; எனது ஆர்வக் கண்கள் அதன் சௌந்தரியத்தைப் பருகி மகிழ்ந்தன. உனது தந்தத் தோள்களை நான் தொட்டு நடுங்கினேன்; உனது கன்னத்தைத் தீண்டியதும் எனது மணிக்கட்டுகள் சிவந்தன. தரையில் கிடந்த எனது களிமண் கைகளைக் கண்டு, நீ அன்புடன் சிங்காரமாய்ப் புன்முறுவல் பூத்தாய். உனது மன மண்டபத்துக்கு, உன் கண்களே இரண்டு இருண்ட சன்னல்கள். நான் பட்சிபோல் உள்ளே பறந்துவந்து, உனது மனவிந்தையின் ஆழத்தை நுகர்ந்தேன். இந்த உணர்ச்சிப் புயலில், இயற்கை அருள் கூர்ந்து அருவிபோல் என் மனக்குகையில் வந்து நுழைந்து விட்டது. உன் மார்பின் விந்தை ஓங்கிச் சிலிர்க்கக் கண்டேன்; உன் பாத மலர்கள் வெளியே எட்டிப் பார்த்தன. உன் மார்புக் குன்றுகளினின்று முத்தம் பொறித்து தழுவி வெளியே நழுவி வரும்போது, மண்ணிலே நான் சாய்ந்துவிட்டேன். உனது பற்கள் என்ன விஷப் பற்களோ? உன் உதடுகள் ஏன் ரத்தம் போல் சிவந்து மின்னின?

—ஏ. பீ. வாக்கர்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mlgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

இலங்கை ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

நல்ல கருத்துக்கள் நிறைந்த படங்களை திருச்சி-தஞ்சாவூரில் வெளியிடுவோர்

ராணி பிக்சர்ஸார்!

★

எம். ஏ. வி. பிக்சர்ஸின் மாங்கல்யம்

டைரக்‌ஷன்: கே. சோமு.

★

பரிமளாவின் சொர்க்கவாசல்

அறிஞர் அண்ணா எழுதியது

★

பத்மினி பிக்சர்ஸின்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

டைரக்‌ஷன்: ப. நீலகண்டன்

★

ஜெயந்தியின் பொன்வயல்

டைரக்‌ஷன்: ஏ. டி. கே.

★

சங்கீதாவின் நால்வர்

டைரக்‌ஷன்: வி. கிருஷ்ணன்

★

அசோசியேடட் ஆசைமகன்

டைரக்‌ஷன்: ஜி. ஆர். ராவ்

★

பள்ளிபாட்டின், முயற்சி

நரசிம்மபாரதி நடித்தது.

★

மதராஸ் பிக்சர்ஸின் பணம்

டைரக்‌ஷன்: என். எஸ். கே.

ராணி பிக்சர்ஸ், திருச்சி.

தந்தி. "ராஜா". போன் 218. A.

பிரெஞ்சு நாட்டை ஆண்ட சார்லஸ் மன்னனுக்கு ஏராளமான காதலியர் இருந்தனர். அவர்கள் அத்தனைபேருக்கும் அவன் ஒரே மாதிரியான நகைகள் செய்து கொடுத்திருந்தான். அந்தக் காதலியரிலே ஒருத்தி, ஒரு படை வீரனைக் காதலித்தாள். சார்லஸுக்கு விஷயம் தெரிந்தால் சாவுதான் தன் முடிவு என்று தெரிந்தும், அவள் காதலுக்கு இணங்கினான், வீரன். காரணம் அவள் அழகல்ல; அவளிடத்திலிருந்த நகைகள்!

சில நாட்கள் செல்ல, சார்லஸ் ஒரு நாள் அந்தக் காதலியோடு மஞ்சத்தில் இருக்கும்போது, அவள் கழுத்தில் இருந்த நகையைப் பார்த்தான். அத்தனையும் போலி! கள்ளக் காதலர் மரண தண்டனை அடைந்தனர்! உண்மை நகை வீரனிடமிருந்து கைப்பற்றப் பட்டது.

சார்லஸ் இறந்தபின், அவனது நகைகளைக் கணக்குப் பார்த்ததில் ஒரு வருட காலத்திற்கு பிரஞ்சு நாட்டிற்குப் போதுமான சேமிப்பு நிதியாக இருந்ததாம்.

★

நகை வாங்குவது, சேமிப்புத் தான்; நம்பிக்கையான இடமாக பி. ஏ. ராஜூ செட்டியார் கடை சேவை செய்கிறது.

வைரம், தங்கம், வெள்ளி நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் என்றும் கிடைக்கும் இடம்.....

Anand...

பி. ஏ. ராஜூ செட்டியார் & பிரதர்.

சுவர்ணமாளிகை.. கோயமுத்தூர்.

198325

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher: KANNADHASAN, 2, Shanmuga Mudali Street, Madras-14.